بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 11

இதழ் 45

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1448 - ஜமாதில் அவ்வல் 24

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - நுபுவ்வத் 05 ★ 05 நவம்பர் 2026

அல்லாஹ்வின் கட்டளை

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا قُوا
أَنْفُسَكُمْ وَأَهْلِيكُمْ نَارًا

பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! மனிதர்களும், கற்களும் எரிபொருளாக இருக்கக் கூடிய நரகத்திலிருந்து உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள். (66:7)

وَأْمُرْ أَهْلَكَ بِالصَّلَاةِ وَاصْطَبِرْ عَلَيْهَا

தொழுதுவருமாறு உம் குடும்பத்தினருக்கு வலியுறுத்திக் கூறிக் கொண்டிருப்பீராக! நீரும் அதில் நிலை நிற்பீராக. (20:133)

அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

நபிமொழி

பிள்ளைகளின் தர்பிய்யத்
பெற்றோரின் பொறுப்பும் தொழுகைக்கான நடைமுறைப் பயிற்சியும்

عَنْ عَبْدِ اللّٰهِ بْنِ عُمَرَ رَضِيَ اللّٰهُ عَنْهُمَا قَالَ
قَالَ رَسُولُ اللّٰهِ أَلَا كُلُّكُمْ رَاعٍ وَكُلُّكُمْ مَسْئُولٌ
عَنْ رَعِيَّتِهِ، وَالرَّجُلُ رَاعٍ عَلَى
أَهْلِ بَيْتِهِ وَهُوَ مَسْئُولٌ عَنْهُمْ۔

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்;

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'அறிந்து கொள்ளுங்கள்! உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளர் ஆவார்.மேலும், ஒவ்வொருவரும் தமது பொறுப்பின் கீழ் உள்ளவர்களைப் பற்றி விசாரிக்கப்படுவர். ஆண் தன் குடும்பத்தினருக்குப் பொறுப்பாளர் ஆவார்; அவர் அவர்களைப் பற்றி விசாரிக்கப்படுவார்.'

(ஸஹீஹுல்-புஹாரி, கிதாபுந் நிகாஹ், ஹதீஸ் 5200; ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுல் இமாரா, ஹதீஸ் 1829)

عَنْ عَبْدِ اللّٰهِ بْنِ عَمْرٍو رَضِيَ اللّٰهُ عَنْهُمَا قَالَ قَالَ رَسُولُ اللّٰهِ مُرُوا
أَوْلَادَكُمْ بِالصَّلَاةِ وَهُمْ أَبْنَاءُ سَبْعِ سِنِينَ، وَاضْرِبُوهُمْ عَلَيْهَا
وَهُمْ أَبْنَاءُ عَشْرٍ، وَفَرِّقُوا بَيْنَهُمْ فِي الْمَضَاجِعِ۔

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'உங்கள் குழந்தைகளுக்கு ஏழு வயதாகும்போது தொழுகைக்கான கட்டளையிடுங்கள்; மேலும், பத்து வயதில் தொழுகையின் விவகாரத்தில் கூடுதலாக வலியுறுத்துங்கள். மேலும் அவர்களின் படுக்கைகளையும் தனித்தனியாக அமைத்து வையுங்கள்.' (ஸுனன் அபீ தாவூத், கிதாபுஸ் ஸலாத், ஹதீஸ் 495)

* * * * * * * * * * * * *

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்

பிள்ளைகளுக்காக துஆ செய்யுங்கள்

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் பிள்ளைகளின் தர்பிய்யத் தொடர்பாக அல்லாஹ்வின் அருள் மற்றும் துஆக்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்:

'நேர்வழியும், தர்பிய்யத்தும் உண்மையான இறைவனின் பணியாகும். கடுமையாக (பிள்ளைகளாகிய) அவர்களை பின்தொடர்வதும், ஒரு விஷயத்தில் வரம்பு மீறி (அவர்களை) வற்புறுத்துவதும் அதாவது எதற்கெடுத்தாலும் ஒவ்வொரு விஷயத்திலும் அவர்களை தடுப்பதும், கண்டிப்பதும் ஒருவகையில் நாமே நேர்வழியின் உரிமையாளர்கள் ஆவோம் ; மேலும், நமது விருப்பப்படியே (குழந்தையாகிய) அதனை ஒரு வழியில் கொண்டு வந்துவிடுவோம் என்பதன் வெளிப்பாடாக இருக்கிறது. இது ஒரு வகையான மறைமுகமான இணை வைத்தலாகும். இதிலிருந்து நமது ஜமாஅத் தவிர்ந்திருக்க வேண்டும்.....

நாமோ எமது பிள்ளைகளுக்காக துஆ செய்கிறோம்; மேலும் மேலோட்டமாக கல்வி மற்றும் நற்பண்புகளின் ஒழுங்குமுறைகளை பின்பற்றச் செய்கிறோம். அவ்வளவுதான்! இதற்கு மேல் ஒன்றுமில்லை; பின்னர் அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை கொள்கிறோம். ஒருவரிடத்தில் இருக்கும் நற்பேறுக்கான விதைக்கேற்ப உரிய நேரத்தில் பசுமையாகி விடும்.'

(மல்ஃபூஸாத், பாகம் 1, பக்கம் 309, பதிப்பு 2003, ரப்வா)

* * * * * * * * * * * * *

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் கூற்றுகள்

உயர்ந்த தலைமுறையை உருவாக்குதல்
பிள்ளைகள் வளர்ப்பும் இறையச்சமும்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் சிறந்த முறையில் தர்பிய்யத் வழங்கி, அவர்களின் நற்பண்புகள் அவர்களுடன் மட்டுமே நின்றுவிடாமல் இருக்க முயற்சி செய்தால், பின்னர் அதன் தாக்கம் தலைமுறை தலைமுறையாக அவர்களின் சந்ததியினரிடமும் கடத்தப்பட்டுக் கொண்டே சென்றால் பின்னர் இஸ்லாத்திற்கும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் பெருமை சேர்க்கக் கூடிய மிகச் சிறந்த தலைமுறைகளை அவர்கள் உருவாக்க முடியும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

ஆனால் வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், தங்கள் பிள்ளைகளுக்கான சரியான தர்பிய்யத்தின் பக்கம் கவனம் செலுத்துபவர்கள் மிகச் சிலரே இருக்கின்றனர். அவர்களிடம் தனிப்பட்ட முறையில் இறையச்சமும் இருக்கின்றது; ஆன்மிகமும் இருக்கின்றது; உயர்ந்த ஒழுக்கமும், இரக்க சிந்தனைகளும், அறிவாற்றலும் இருக்கின்றது; மேலும், ஞானத்தைப் பெறும் தாகமும், நற்செயல்களில் முன்னேறும் ஆற்றலும் இருக்கின்றது; ஆனால், இந்த நற்பண்புகளைத் தங்கள் பிள்ளைகளிடமும் உருவாக்க முயற்சி செய்ய வேண்டும் என்ற விஷயத்தில் அவர்களுக்கு ஒருபோதும் கவனம் உருவாகுவதில்லை. நிச்சயமாக, மரபுவழியாகவும் பெற்றோரின் சில பண்புகள் பிள்ளைகளுக்குக் கடத்தப்படுகின்றன; ஆனால் ஒரு சிறந்த தலைமுறை உருவாகுவதற்கு மிக உயர்ந்த

இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம்....

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

பிரிட்டன் ஆண்டு மாநாடு - 2026
ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆற்றிய நிறைவுரையின் சுருக்கம்

தஷஹ்ஹுத், தஅவுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு கூறினார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்களை இஸ்லாத்தின் போதனைகளை உலகெங்கும் பரப்புவதற்காக அல்லாஹ் அனுப்பினான். இக்காலத்தில் அல்லாஹ் நம் மீது அருள்புரிந்தவாறு நம்மை படைத்துள்ளான். தோன்றவிருந்த அந்த மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) தமது முழுமையான முயற்சியால் எத்தகைய ஒரு ஜமாஅத்தை உருவாக்க வேண்டியிருந்தது என்றால், அதன் ஒவ்வோர் உறுப்பினரும் முழுமையான ஏகத்துவ வாதியாகத் திகழ்ந்து, இணை வைத்தலை ஒழிப்பதற்காகத் தனது சொந்த வாழ்வில் பாடுபடுவது மட்டுமல்லாமல், உலகையும் ஏக இறைவனின் கொடியின் கீழ் கொண்டு வருவதற்காக பாடுபட வேண்டும்.

எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இந்த நோக்கத்திற்காக ஒரு தூய ஜமாஅத்தை நிறுவினார்கள். சில நிபந்தனைகளின் அடிப்படையில் தம்மைப் பின்பற்றுவோரிடம் பைஅத் வாங்கினார்கள். அந்த நிபந்தனைகளின் எண்ணிக்கை பத்தாகும். அந்த பைஅத்தின் வாசகங்களையே நாம் ஜமாஅத்தில் இணையும்போது கூறுகிறோம்.

அன்னார் (அலை) இந்த விஷயங்களின் கீழ் பைஅத் வாங்கினார்கள்.

அதாவது, நான் மண்ணறைக்குள் செல்லும் வரை (மரணிக்கும் வரை) இணை வைத்தலுக்கு அருகில் கூட செல்ல மாட்டேன்.

பொய், விபச்சாரம், தீய பார்வை, கட்டுப்படாமை, அநீதி இழைத்தல், நம்பிக்கை துரோகம் செய்தல், குழப்பம் விளைவித்தல், கிளர்ச்சி செய்தல் ஆகியவற்றிலிருந்து தவிர்ந்து கொள்வேன். மன உணர்ச்சிகள் எந்த அளவு தீவிரமடைந்தாலும் அவற்றை மேலோங்க விடாது அடக்கிக் கொள்வேன்.

ஆன்மிக முன்னேற்றத்திற்காக ஐவேளைத் தொழுகைகளை பேணுவதோடு மட்டுமின்றி, தஹஜ்ஜுத் தொழுகையையும் நிறைவேற்ற முயற்சிப்பேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்தும் ஓதுவேன்; தினமும் என் பாவங்களுக்காக பாவ மன்னிப்புக் கோரி வருவேன். அல்லாஹ் புரிந்த நன்மைகளை நினைவில் கொள்வேன்; அவனைப் புகழ்ந்து கொண்டே இருப்பேன்.

அல்லாஹ்வின் படைப்புகளுக்குப் பொதுவாகவும், முஸ்லிம்களுக்கு குறிப்பாகவும் எனது மன உணர்ச்சிகளின் காரணமாக எந்தவொரு தீங்கும் இழைக்க மாட்டேன். தீய சடங்கு சம்பிரதாயங்களிலிருந்தும், மனதின் சொந்த விருப்பங்களைப் பின்பற்றுவதிலிருந்தும் விலகியிருப்பேன். தற்பெருமையிலிருந்து தவிர்ந்திருப்பேன்; பணிவு, நற்பண்பு, மென்மை மற்றும் அடக்கத்தைக் கடைப்பிடிப்பேன். மார்க்கத்தின் கண்ணியத்தையும், இஸ்லாத்தின் மீதான நற்பற்றையும் என் உயிர், செல்வம், மானம் மற்றும் என் பிள்ளைகளை விட மேலானதாகக் கருதுவேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் வழங்கும் எந்தவொரு தீர்ப்பையும் உளமார ஏற்றுக் கொள்வேன்.

ஹுஸ்ஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

இங்கு கிலாஃபத்திற்கு முழுமையான கீழ்ப்படிதலும் அடங்கியுள்ளது; ஏனெனில் கிலாஃபத்தும் அல்லாஹ்வின் வாக்குறுதிகளுக்கு ஏற்ப ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்காகவே நிறுவப்பட்டுள்ளது.

ஹுஸ்ஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

இந்தக் கருத்தை நான் ஏற்கனவே எடுத்துரைத்து விட்டேன். மேலும் இது (பைஅத்தின் நிபந்தனைகள் என்ற) நூல் வடிவிலும் வெளியிடப்பட்டுள்ளது; இருப்பினும் இந்த விஷயத்தின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு இன்று நான் மீண்டும் இது தொடர்பாகச் சிலவற்றை எடுத்துரைப்பேன்.

பைஅத்தின் முதல் நிபந்தனையில் இணைவைப்பிலிருந்து தவிர்ந்திருப்பது குறிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

மனிதப் படைப்பின் உண்மையான நோக்கமும், இலக்கும் அவன் இறைவனுக்கே உரியவனாக ஆகிவிட வேண்டும் என்பதாகும்... பாவங்கள் மிகுதியாக இருந்தாலும், அவற்றுக்கு எண்ணற்ற பிரிவுகளும், கிளைகளும் இருக்கின்றன.... ஆயினும் மகா கொடிய பாவம் ஷிர்க் (எனும் இணை வைத்தல்) ஆகும். நற்பேறிழந்த மனிதன் இதில் (அதாவது இணை வைப்பில்) எவ்வளவுக்கு எவ்வளவு சிக்குகிறானோ, அவ்வளவுக்கு அவ்வளவு தன் உண்மையான இலக்கிலிருந்து விலகிக் கொண்டே செல்கிறான். இறுதியில் வீழ்ச்சியடைந்து கொண்டே சென்று மிக கீழான ஓரிடத்தில் விழுகிறான்; அது இன்னல்கள், சிரமங்கள் மற்றும் அனைத்து வகையான துன்பங்களின் உறைவிடமாகும், அதை நரகம் என்றும் கூறுகிறோம்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பைஅத் வாங்கியபோதும், ஷிர்க்கிலிருந்து முற்றிலும் தவிர்ந்திருக்க வேண்டும் என்பதன் மீதே பைஅத் வாங்கினார்கள். எனவே, நமது பைஅத் உடன்படிக்கையிலிருந்து நம்மை விலக்கக்கூடிய எந்தவொரு செயலையும் நாம் ஒருபோதும் செய்துவிடாமல் இருக்க நாம் எப்போதும் முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

எல்லா விதமான இணைவைப்பிலிருந்தும் விலகியிருக்க வேண்டும். சூரியனையோ, சந்திரனையோ, வானத்து நட்சத்திரங்களையோ, காற்றையோ, நெருப்பையோ, தண்ணீரையோ அல்லது பூமியிலுள்ள வேறு எதனையுமோ வணக்கத்திற்குரியதாக ஆக்கிக் கொள்ளக் கூடாது; உலகக் காரணிகளுக்கு அளவுக்கு மிஞ்சிய மதிப்பளித்து, அவை ஏதோ இறைவனுக்கு இணையாகும் என்பது போல அவற்றின் மீது முழு நம்பிக்கை வைக்கக் கூடாது; மேலும் நமது திறமையையும், முயற்சியையும் பெரிதாக எண்ணக் கூடாது, ஏனெனில் இதுவும் இணைவைத்தலின் வகைகளில் ஒரு வகையாகும்.

இணை வைத்தலை மறுப்பது தொடர்பான சூரத்துல்-இக்லாஸ் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இது ஒரு சிறிய அத்தியாயமாகும்; ஆனால் இது மிகுந்த நுட்பத்துடன் அனைத்து வகையான இணைவைப்பிலிருந்தும் மனிதனை விலக்கி விட்டது. மேலும், அல்லாஹ்வின் தூய்மையை அழகுற தெளிவுபடுத்தி விட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புதல்வர் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் மரணமடைந்தபோது சூரிய கிரகணம் ஏற்பட்டது. ஹஸ்ரத் இப்ராஹீமின் மரணத்தின் காரணத்தினால்தான் கிரகணம் பிடித்தது என்று மக்கள் கூறினர். ஆனால், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நிச்சயமாகச் சூரியனும், சந்திரனும் அல்லாஹ்வின் அடையாளங்களைச் சார்ந்தவையாகும்; இவை இரண்டும் எவருடைய வாழ்வின் பொருட்டோ அல்லது மரணத்தின் பொருட்டோ கிரகணம் அடைவதில்லை.'

மற்றோர் இடத்தில் அன்னார் (அலை) கூறினார்கள்: இணை வைத்தல் மூன்று வகைப்படும்:

பொதுவாக வழக்கத்திலுள்ள உருவ வழிபாடு செய்தல். இரண்டாவது வகை என்னவென்றால், காரண காரியங்கள் மீது எல்லை மீறிய நம்பிக்கை வைப்பது. மூன்றாவது வகை என்னவென்றால், அல்லாஹ் தஆலாவின் இருப்பிற்கு முன்னால் தன் சுய இருப்பையும் ஒரு பொருட்டாகக் கருதுவது.

பௌதீக முன்னேற்றம் மிகுந்த இக்காலத்தில் காரணிகளை இணையாக்கிக் கொள்ளுதல் எனும் ஷிர்க் மிகவும் அதிகரித்துவிட்டது.

அன்னார் (அலை) கூறினார்கள்:

'லா இலாஹ இல்லல்லாஹ்' என்பது ஏகத்துவ கலிமா ஆகும்; அல்லாஹ் தஆலாவைத் தவிர வேறு எவரும் வணக்கத்திற்கும், உண்மையான கீழ்ப்படிதலுக்கும் தகுதியானவர் அல்ல என்பதே இதன் பொருளாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வழிகாட்டுதல்களை இறைவனிடமிருந்து பெற்றுப் படைப்பினங்களுக்கு எட்ட வைக்கக் கூடியவர் ஆவார்கள்; அங்கிருந்து வருபவை யாவும் இந்த வழியிலேயே வருகின்றன.

ஹுஸ்ஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

நாம் ஒவ்வொரு காரியத்தைச் செய்யும்போதும், ஒவ்வொரு வார்த்தையைப் பேசும்போதும், இந்த வார்த்தை நம்மை இறைவனிடமிருந்து தூரப்படுத்தி ஷைத்தானுக்கு நெருக்கமாக்கிவிடக் கூடாது என்ற சிந்தனை எப்போதும் நமக்கு இருக்க வேண்டும்.

நான் உமக்கு வெற்றிகளை வழங்குவேன் ; நிச்சயமாக வழங்குவேன் என்று அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளான். ஆனால் அந்த வெற்றிகளில் நாமும் பங்குபெற வேண்டுமெனில், நாம் உளத் தூய்மையுடையவர்களாக திகழ்ந்து அல்லாஹ் தஆலாவின் ஏகத்துவத்தைப் பிரகடனம் செய்பவர்களாகத் திகழ நாமும் முயற்சி வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்:

அஹ்மதி சமுதாயமே! அல்லாஹ் நமக்கு உறவினர் அல்லன். (ஷிர்க் எனும்) இணை வைத்தலிலிருந்து விலகி இருங்கள்; மேலும் அல்லாஹ் உங்கள் பாதுகாவலனாக இருக்கும் பொருட்டு நீங்கள் அவனையே வணங்குங்கள்.

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம்....

ஜுமுஆ பேருரை

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் மீது கொண்டிருந்த தவக்குல் குறித்த சம்பவங்கள்

ஸய்யிதுனா அமீருல் மு'மினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 18 செப்டம்பர் 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **தபூக்** மாதம் **18 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வின் மீது இருந்த தவக்குல் பற்றிக் குறிப்பிட்டவாறு மக்காவிலிருந்து அன்னார் (ஸல்) மேற்கொண்ட ஹிஜ்ரத் தொடர்பான சம்பவங்களை நான் கடந்த குத்பாவில் எடுத்துரைத்திருந்தேன். அந்தப் பயணத்தில் மேலும் சில நிகழ்வுகளின் விவரங்களும் உள்ளன. வரலாற்றில் இதற்கான குறிப்பு கிடைக்கிறது. இதன் மூலம் அன்னாருடைய தவக்குலின் மற்றொரு மகத்தான அடையாளம் தெளிவாகிறது.

அறிவிப்புகளில் வருகிறது: இந்த ஹிஜ்ரத்தின் போது ஸுராக்கா பின் மாலிக் வெகுமதிக்கான பேராசையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்தொடர எண்ணம் கொண்டார். ஸுராக்கா பின் மாலிக் இந்தச் சம்பவத்தை இவ்வாறு எடுத்துரைக்கின்றார். இவர் பின்னாட்களில் முஸ்லிமாக ஆகிவிட்டார். மேலும் இஸ்லாத்தைத் தழுவிய பிறகு அவரே இந்த சம்பவத்தை இவ்வாறு எடுத்துரைத்துள்ளார். கூறுகின்றார்:

எங்களிடம் குறைஷி காஃபிர்களின் தூதுவர்கள் வந்தனர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகிய இருவரையும் கொலை செய்யக் கூடியவர்களுக்கு அல்லது கைதியாகப் பிடித்து வருபவர்களுக்கு பரிசுத் தொகையை அவர்கள் நிர்ணயித்திருந்தனர்.

ஸுராக்கா கூறுகிறார்: 'நான் எனது பனூ முத்லிஜ் கோத்திரத்தின் ஒரு சபையில் அமர்ந்திருந்தபோது, ஒருவர் அவர்களுக்கு முன்னால் இருந்து வந்து, எங்கள் அருகில் நின்றார். அப்போது நாங்கள் அமர்ந்திருந்தோம். அப்போது, ஸுராக்காவே! நான் கடற்கரையின் பக்கம் சில நிழல்களைப் பார்த்தேன்; அல்லது மூன்று நபர்கள் கொண்ட ஒரு குழு செல்வதைக் கண்டேன்; மேலும் என் எண்ணப்படி, எப்படியிருப்பினும் அவர்கள் முஹம்மது (ஸல்) மற்றும் அவருடைய தோழராகவே இருப்பார்கள் என்று அவர் கூறினார்.

ஸுராக்கா பின் மாலிக் கூறுகிறார்: 'நிச்சயமாக அது முஹம்மது (ஸல்) அவர்களுடைய குழுவாகத்தான் இருக்கும் என்பதை நான் அறிந்து கொண்டேன், ஆனால், என்னுடன் வேறு யாரும் இந்தப் வெகுமதியில் பங்கு பெறுவதை நான் விரும்பவில்லை. எனவே, நான் உடனடியாக சூழ்நிலையின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டு, அந்தத் தகவலைச் சொன்னவரிடம், அவர் மௌனமாக இருக்கும்படி கண்ணால் சைகை செய்தேன். மேலும், நானோ அவரிடம் கூறினேன்:

இல்லை! இல்லை! அது முஹம்மதுடைய குழுவாக இருக்க முடியாது; மாறாக, நீர் குறிப்பிடும் நபர்கள் இதோ இப்போதுதான் எங்களுக்கு முன்னால் கடந்து சென்றனர். அவர்கள் பனூ ஃபலான் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். அவர்கள் தங்களது காணாமல் போன ஒட்டகத்தைத் தேடியவாறு சென்று கொண்டிருந்தனர்.'

ஸுராக்கா கூறுகிறார்: யாருக்கும் எந்தக் சந்தேகமும் வராமல் இருப்பதற்காக நான் சிறிது நேரம் அதே சபையில் இருந்தேன். பின்னர் எனது வேலைக்காரப் பெண்ணிடம், எனது இன்ன வேகமான குதிரையை வீட்டின் பின்புறம் உள்ள குறிப்பிட்ட இடத்திற்கு அழைத்துச் சென்று எனக்காகக் காத்திருக்கும்படி கூறினேன். சிறிது நேரத்திற்குப் பிறகு நான் அங்கே சென்றடைந்து விட்டேன்.

மேலும் அவர் எடுத்துரைக்கின்றார்: 'நான் (அம்புகள் மூலம்) சகுனம் பார்த்தேன். ஆனால் அது இந்தப் பயணத்திற்கு எதிராக வந்தது. ஆனால், நான் அதைப் பொருட்படுத்தவில்லை; குதிரையைத் தட்டிவிட்டுக் காற்றைப் போல விரைந்தேன். ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் குழு என்று நான் நம்பிய அந்தப் பயணக் குழுவை நோக்கி வேகமாகப் பின்தொடர்ந்து சென்றேன்.'

ஸுராக்கா கூறுகிறார்: 'நான் அடுத்தடுத்த பாதைகளைக் கடந்து விரைவாக அந்தக் குழுவின் அருகில் சென்றடைந்து விட்டேன். இன்னும் சிறிது தூரத்தில்தான் இருந்தேன்; அப்போது எனது குதிரை வழக்கத்திற்கு மாறாகத் தடுமாறி கீழே விழுந்துவிட்டது. அதனால் நானும் அதில் இருந்து கீழே விழுந்தேன். பிறகு நான் எழுந்து நின்று சகுனம் பார்த்தேன். அப்போது சகுனம் மீண்டும் எனது எண்ணத்திற்கு எதிராகவே வந்தது. இருப்பினும், முஹம்மது (ஸல்) அவர்களைத் திருப்பி அழைத்துச் சென்று, நூறு ஒட்டகங்கள் பரிசைப் பெற வேண்டும் என்று நான் விரும்பினேன்.' மீண்டும் நான் எழுந்து குதிரையின் மீது ஏறினேன். இப்போது நான் எவ்வளவு அருகில் சென்றுவிட்டேன் என்றால், அவர்கள் முஹம்மது (ஸல்) மற்றும் அபூ பக்ர் ஆவர் என்பதை நான் அடையாளம் மட்டும் கண்டு கொள்ளவில்லை. மாறாக, முஹம்மது (ஸல்) அவர்கள் திருக்குர்ஆன் ஓதும் சப்தமும் எனக்கு வந்து கொண்டிருந்தது. அன்னார் (ஸல்) இங்கும் அங்கும் பார்க்கவில்லை. ஆனால், ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதுகாப்பிற்காகவும் பின்னால் திரும்பி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.'

அவர் கூறுகிறார்: 'இதற்கிடையே எனது குதிரை மீண்டும் தடுமாறியது; அதன் கால்கள் மணலில் புதைந்துவிட்டன. நானும் அதில் இருந்து கீழே விழுந்து விட்டேன். பின்னர் நான் குதிரையை அதட்டினேன். மேலும் எழுந்து நின்றேன். ஆனால், அதனால் தனது கால்களைத் தரையிலிருந்து வெளியே எடுக்க முடியவில்லை. இறுதியாக அது நேராக நிமிர்ந்து நின்றபோது, அதன் கால்களிலிருந்து புழுதி கிளம்பி வான்வெளியில் புகையைப் போலப் பரவி விட்டது. நான் மீண்டும் அம்புகள் மூலம் சகுனம் பார்த்தேன், அப்போது, மீண்டும் 'நான் விரும்பாத விஷயமே வந்தது. அங்கிருந்தபடியே நான் பாதுகாப்புக் குரல் எழுப்பினேன்; மேலும், என் தரப்பிலிருந்து உங்களுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது என்று நான் கூறினேன். உடனே, அபூபக்ர் (ரலி) அவர்களிடம், 'அவர் என்ன விரும்புகிறார்? என்று அவரிடம் கேளுங்கள்' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அப்போது, 'நான் ஸுராக்கா ஆவேன்; உங்களிடம் நான் பேச விரும்புகிறேன்' என்று நான் கூறினேன். உடனே அவர்கள் நின்று விட்டனர். அப்போது, மக்காவாசிகள் உங்களை உயிருடனோ அல்லது இறந்த நிலையிலோ பிடித்துத் தருபவருக்கு நூறு ஒட்டகங்களை வெகுமதியாக அறிவித்துள்ளனர்; அந்த ஆசையில்தான் நான் தங்களைப் பின்தொடர்ந்து வந்தேன்; ஆனால் எனக்கு நடந்த நிகழ்வுகளிலிருந்து தங்களை நான் பின்தொடர்வது சரியல்ல என்ற உறுதி எனக்கு வந்து விட்டது என்று ஸுராக்கா கூறத் தொடங்கினார். மேலும், பயணத்திற்கான சில பொருட்கள் வேண்டுமென்றால், அத்தியாவசியமான உணவுப் பொருட்களையும் பானங்களையும் எடுத்துச் செல்லுங்கள் என்று கூறி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் அவர் சில உதவிகளை வழங்க முன்வந்தார். ஆனால், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. 'எங்களைப் பற்றி

யாரிடமும் கூற வேண்டாம்' என்று மட்டும் அன்னார் (ஸல்) கூறினார்கள். அவரும் அவ்வாறே உறுதி கொடுத்தார். மேலும் அத்துடன் அவர் கூறினார்: 'ஒரு நாள் நீங்கள் நிச்சயமாக அரசாட்சியைப் பெற்று விடுவீர்கள் என்று நான் நம்புகிறேன்'. அப்போது. 'நான் தங்களிடம் வரும்போது என்னுடன் கண்ணியமாகவும், மரியாதையுடனும் நடந்து கொள்ளப்படும் என்று எனக்கு ஓர் உறுதிமொழி எழுதிக் கொடுங்கள்' (என்றார்).

சில அறிவிப்புகளின்படி, அவர் பாதுகாப்புக் கடிதம் கேட்டு விண்ணப்பித்திருந்தார்; எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உத்தரவின்படி, அவருக்கு அந்த பாதுகாப்புக் கடிதத்தை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், மற்றோர் அறிவிப்பின்படி ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்களும் எழுதி கொடுத்தனர். அவரும் அதைப் பெற்றுக் கொண்டு திரும்பிச் சென்று விட்டார்.' (ஸஹீஹுல் புஹாரி, கிதாப் மனாக்கிபுல் அன்ஸார், பாப் ஹிஜ்ரத் அன்நபி (ஸல்) வ அஸ்ஹாபிஹி இலா அல் மதீனா, ஹதீஸ் 3906; ஸுபுலுல் ஹுதா வர் ரஷாத், தொகுதி 3, பக்கம் 248; கிஸ்சத் ஸுராக்கா... தாருல் குதுபில்-இல்மிய்யா, பெய்ரூத் 1993; முஹம்மது ரஸுலுல்லாஹ் வ அல்லதீன மாஅஃ, தொகுதி 3, பக்கம் 64-65, மக்தபத்து மிஸ்ர்)

'இதுதான் அல்லாஹ்வின் மீது அன்னார் (ஸல்) வைத்திருந்த முழுமையான தவக்குலின் மகத்துவமாகும். எந்தவித பயமும் இல்லாமல், அல்லாஹ்வின் திருவசனங்களை ஓதியவாறே அன்னார் (ஸல்) சென்று கொண்டிருந்தார்கள். தமக்கு எதுவும் நேராது என்பதில் அன்னாருக்கு எத்தகைய உறுதியான நம்பிக்கை இருந்தது என்றால், 'தனக்கு பாதுகாப்புக் கடிதம் எழுதித் தாருங்கள்' என்று அவர் கேட்டபோது, அன்னார் (ஸல்) அவருக்குப் பாதுகாப்புக் கடிதமும் எழுதிக் கொடுத்து விட்டர்கள். இறுதியில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கே வெற்றி கிடைக்கும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. மேலும், நிச்சயமாக தமக்கே வெற்றி கிடைக்கும் என்பதில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அந்த நபரைக் காட்டிலும் அதிக நம்பிக்கை இருந்தது; அதனால்தான் அவருக்குப் பாதுகாப்புக் கடிதமும் எழுதிக் கொடுத்து விட்டார்கள்.'

'மற்றோர் அறிவிப்பின்படி, அவர் திரும்பிச் செல்லும்போது, 'ஸுராகாவே! கிஸ்ராவின் (பாரசீகப் பேரரசர்) வளையல்கள் உமது கைகளில் இருக்கும்போது உமது நிலை என்னவாக இருக்கும்?' என்று அவரிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அப்போது, ஸுராகா ஆச்சரியமடைந்து திரும்பினார். மேலும், 'ஹுர்முஸின் மகன் கிஸ்ராவா?!' என்று கேட்டார். அதற்கு, 'ஆம்! அதே ஹுர்முஸின் மகன் கிஸ்ரா' என்று அன்னார்(ஸல்) கூறினார்கள்.

எனவே, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் கிஸ்ராவின் வளையல்களும், அவரது கிரீடமும், அவரது பட்டையும் கொண்டுவரப்பட்டபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஸுராகாவை அழைத்து, 'உமது கைகளை உயர்த்தும்' என்று கூறி, அந்த வளையல்களை அவருக்கு அணிவித்தார்கள். மேலும், 'ஹுர்முஸின் மகன் கிஸ்ராவிடமிருந்து இவைகளைப் பறித்துத் தந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் என்று கூறுவீராக!' என்றார்கள். (முஹம்மதுர் ரஸுலுல்லாஹ் வல்லதீன மஃஅஹ் லி அப்தில் ஹமீத் ஜவ்ததுஸ்-ஸஹார், தொகுதி 3, பக்கம் 65, அல்-ஹிஜ்ரா, மக்தபஃ மிஸ்ர்)

இந்த பயணத்தின் நிகழ்வை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் தமது சொந்த வார்த்தைகளில் எடுத்துரைத்துள்ளார்கள்:

'ஹிஜ்ரத் நிகழ்வு என்பதும் ஒரு விசித்திரமான, பயங்கரமான நிகழ்வாகும். முழு அரேபியாவும் (அன்னாருக்கு) எதிராகவும், இரத்தத் தாகத்துடனும் இருந்தது. ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு தோழரை மட்டும் அழைத்துக் கொண்டு மதீனாவை நோக்கி சென்றார்கள். வழியில் மார்க்க எதிர்ப்பின் காரணமாக அன்னாரைக் கொல்வதைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்த அனைத்துக் கோத்திரங்களும் வசித்து வந்தன. குறைஷிகளின் மீதான பயத்தால் மௌனமாக இருந்தன. ஆனால், குறைஷிகளே அன்னாரைக் கொலை செய்வதற்கு தீவிரமாக (களம்) இறங்கியிருந்த அந்த நேரம் அப்போது வந்துவிட்டது. மேலும், 'நாம் இந்த நபரைக் கொன்று விட்டால் குறைஷிகள் கோபமடைவதற்கு எந்தக் காரணமும் இருக்காது' என்ற நிம்மதி ஒட்டுமொத்த அரபுக் கோத்திரங்களுக்கும் இருந்தது. குறைஷிகளின் எதிர்ப்பின் பயம் மட்டும் நீங்கியிருக்கவில்லை, மாறாக மக்காவில் பெருமானார் (ஸல்) அவர்கள் இல்லாததைக் கண்டு, குறைஷிகள் அன்னாரைக் கொல்வதற்காக வெகுமதியும் நிர்ணயித்திருந்தனர். மேலும், 'எந்த நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ரை உயிருடனோ அல்லது பிணமாகவோ (நவூதுபில்லாஹ்) கொண்டு வருவாரோ, அவருக்கு நூறு, நூறு ஒட்டகங்கள் பரிசாக வழங்கப்படும்' என்று மதீனா செல்லும் வழியில் குடியிருந்த அனைத்து கோத்திரத்தினருக்கும் குறைஷிகள் தகவல் கொடுத்திருந்தனர். கொள்ளையடிப்பதையே வாழ்க்கையாகக் கொண்டிருந்த, மேலும் பொறாமைத் தீயில் ஏற்கனவே வெந்து கரியாகிக் கொண்டிருந்த அரபுக் கோத்திரத்தார் இந்த வாய்ப்பை எப்படிக் கைநழுவ விடுவார்கள்? எல்லாப் பக்கங்களிலிருந்தும் அன்னாரைத் தேடும் பணி தொடங்கியது. அன்னார் (ஸல்) எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியிலும், இரத்தத் தாகம் கொண்ட எதிரியைச் சந்திக்க நேரிடும் என்ற அச்சம் நிலவியது.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில், மிகை வீரமிக்க மனிதரும் கூட மனம் தளர்ந்து, தனது இறுதி முயற்சியைச் செய்யும் திறனை இழந்து விடுவதை பல முறை பார்க்கப்பட்டுள்ளது. மேலும், வழக்கத்திற்கு மாறாக மிகுந்த துணிச்சல்காரராகவும், பலமான இதயம் கொண்டவராகவும் ஒருவர் இருந்தாலும் கூட, அவர் மீதும் அத்தகைய பயம் ஆதிக்கம் செலுத்திவிடும் (அதாவது அச்சம் ஆட்கொண்டு விடும்). அவரது ஒவ்வோர் அசைவிலும் அது வெளிப்படுகின்றது.

அன்னார் (ரலி) எழுதியுள்ளார்கள்:

'வரலாற்றில் பெரும், பெரும் வீரர்களின் சம்பவங்களை நான் படித்துள்ளேன். எனினும், இதுபோன்ற சந்தர்ப்பங்களில் அவர்களின் அந்த நிலையை பெருமானார் (ஸல்) அவர்களுடைய சம்பவத்துடன் எவ்வகையிலும் ஒப்பிட முடியாது. தப்பியோடிக் கொண்டிருந்த நெப்போலியனின் நிலை என்னவாக இருந்தது? என்பதையும், அவரது முகத்தில் ஏக்கத்தின் என்னென்ன அடையாளங்கள் காணப்பட்டன? என்பதையும் வரலாற்றாசிரியர்கள் அறிவார்கள். இந்தியா, பாகிஸ்தான் ஒன்றாக இருந்த இந்தியாவை ஆட்சி செய்த ஹுமாயூன் மன்னர் எவ்வாறு மீண்டும் மீண்டும் தன்னை எதிரிகளின் கைகளில் ஒப்படைக்கத் தயாராக இருந்தார்? என்பதையும், மேலும், அவருடன் மிக விசுவாசமான சில தளபதிகள் மட்டும் இல்லாவிட்டால் அவர் ஒருவேளை அப்படிச் செய்திருப்பார் என்பதையும் அவர்கள் அறிவார்கள். இதேபோல், இன்னும் ஏராளமான பெரிய மற்றும் வீரமான தளபதிகள் வாழ்ந்து மறைந்துள்ளனர். அவர்களுக்கும் கடினமான காலங்கள் வந்துள்ளன. மேலும் எதிரிகள் அவர்களைத் தேடி, அவர்களின் நாலாபுறமும் பரவியிருந்த அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் அச்சத்திற்குள்ளாகியிருந்தனர்.

ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த உலக மனிதர்களில் ஒருவராக இருக்கவில்லை. அன்னாரது பார்வை உலகத்தை நோக்கியதாக இருக்கவில்லை. மாறாக அன்னாரது பார்வை இறைவனை நோக்கியே உயர்ந்திருந்தது. உலகியல் காரணிகள் அன்னாரின் கருத்தில் இருக்கவில்லை, மேலும் அத்தகைய நேரத்தில், ஒரேயொரு தோழருடன் நான் தனியாக என்ன செய்ய முடியும்? இத்தகைய ஆபத்தான பாதையில் எதிரி வந்துவிட்டால் அவனை எதிர்த்துப் போராடுவதற்கு என்னிடம் என்ன ஏற்பாடுகள் உள்ளன? என்று அன்னார் (ஸல்) நினைக்கவில்லை; மாறாக, தனது நல்லடியார்களை எப்போதும் பாதுகாத்து வருகின்ற அந்த இறைவன், மேலும் எந்த இறைவனுடைய தாக்குதலை எந்த எதிரியாலும் எதிர்கொள்ள முடியாதோ அந்த இறைவன் தம்முடன் இருக்கிறான் என்பதை அன்னார் (ஸல்) கண்டு கொண்டிருந்தார்கள்.

அந்த இறைவன் நூஹுடைய இறைவன் ஆவான். அவன் இப்ராஹீமுடைய இறைவன்; அவன் மூஸா (அலை) அவர்களின் இறைவன்; அவன் யூனுஸுடைய இறைவன்; அவன் அய்யூபுடைய இறைவன்; அவன் தாவூதுடைய இறைவன்; அவன் ஸுலைமானுடைய இறைவன்; அவன் மஸீஹுடைய இறைவன் - அவன் தான் என்னுடைய இறைவன் ஆவான்; அவனுடைய சக்திகள் ஒருபோதும் அழிந்துபோவதில்லை. அவன் ஒரு கணம் கூட கவனக் குறைவாக இருப்பதில்லை.

ஸுராகா பின் ஜுஷ்ம் பேராசையினாலும், பகைமையினாலும் பித்துப் பிடித்தவராக வந்து, தூரத்திலிருந்து அன்னாரைப் பார்த்துக் குதிரையை அன்னாரின் பக்கம் ஓட்டி வருகிறார். அவரது நெஞ்சில் ஆசை, கடலைப் போல அலைமோதுகிறது; மதத்தை இழிவுபடுத்துபவரின் இரத்தத்தால் தனது கைகளைக் கழுவித் தனது வெந்த

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

நெஞ்சிற்கு ஆறுதல்படுத்த விரும்பியதுடன், இருநூறு ஒட்டகப் பரிசு - அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நூறு ஒட்டகங்களும், ஹஸ்ரத் அபூபக்கருக்கு நூறு ஒட்டகங்களும் என நிர்ணயிக்கப்பட்டிருந்தன - இருநூறு ஒட்டகங்களின் பரிசும் தனக்குக் கிடைக்கும் என்று அவர் எண்ணுகிறார்.

இதைக் குறித்தே அன்னார் (ரலி) இருநூறு ஒட்டகங்கள் என்று சுட்டிக் காட்டுகின்றார்கள். முந்தைய அறிவிப்பில் நூறு ஒட்டகங்கள் என்று உள்ளது. ஆனால் இருநூறு ஒட்டகங்கள் என்பது நூறு மற்றும் நூறு என்று இரண்டையும் கூட்டியதாகும்.

எவ்வாறாயினும், அது அவருக்கு அவரது சமுதாயத்தில் மிக உயர்ந்த அந்தஸ்தைக் கொடுக்கப் போதுமானதாக இருந்தது. அது அவரது துணிச்சலை மேலும் அதிகரித்து விட்டது. ஒரு வேடன் தனது இரையைக் கண்டதும் பாய்வது போல், அவர் பெருமானார் (ஸல்) அவர்களைக் கண்டதும் அன்னாரை நோக்கிப் பாய்ந்து, வில்லையும் அம்பையும் கையில் ஏந்தி அன்னார் (ஸல்) மீது தாக்குதல் நடத்த விரும்புகிறார். அவர் தனியாக இல்லை. மாறாக ஒரு முழக்கமிட்டு தனது சுற்றுப்புறத்தில் ஆயிரக்கணக்கான நபர்களை அவரால் ஒன்று திரட்ட முடியும். 'அவர் குரல் கொடுத்திருந்தால், அருகிலுள்ள கோத்திரங்களைச் சேர்ந்த மக்கள் அருகில் இருந்திருந்தால் அங்கு வந்திருக்கக்கூடும்.' ஏனெனில் பெருமானார் (ஸல்) அப்போது அதே பகுதியைக் கடந்து சென்று கொண்டிருக்கிறார்கள், ஆனால் பெருமானார் (ஸல்) அப்போது என்ன செய்கிறார்கள்? ஓடிவிடுகிறார்களா? பயந்து அவரிடம் தம்மை ஒப்படைத்து விடுகிறார்களா? அன்னாரது பாதங்கள் தளரத் தொடங்குகின்றனவா? அன்னாருடைய புலன்கள் செயலிழந்து விடுகின்றனவா? அவரைக் கொன்றுவிட்டுத் தப்பியோட முயற்சிக்கும் எண்ணம் கொள்கின்றார்களா? 'தற்போது அந்த நபர் மிகவும் அருகில் இருக்கிறார். தனியாகத்தான் இருக்கிறார் என்றால் அன்னாரும் கூட அம்பு எய்து அவரைக் கொன்றிருக்க முடியுமே!.'

'இல்லை! அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை கொண்ட அந்த மனிதர் இவற்றில் எந்த ஒரு காரியத்தையும் செய்யவில்லை, மேலும் ஸுராகாவுக்கு ஒரு காளை மாட்டுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தைக் கூட அளிக்கவில்லை. ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் தம்மிடம் இருந்த அந்தத் துணிச்சல் மற்றும் தைரியம், ஈமான் மற்றும் உறுதியான நம்பிக்கை, மேலும் தவக்குல் மற்றும் இறை நம்பிக்கை ஆகியவற்றுக்கு மத்தியிலும், ஸுராகா இப்போது நம்மை எந்த அளவுக்கு நெருங்கிவிட்டார்? என்று திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களோ (ஸுராக்காவாகிய) அவரைப் பொருட்படுத்தவே இல்லை, பதறி ஓடுவது ஒருபுறம் இருக்கட்டும்! பயம் அல்லது அச்சத்தின் வெளிப்பாடாக பெருமானார் (ஸல்) அவர்கள் ஒருமுறை கூட தம் முகத்தைத் திருப்பி அவரின் பக்கம் பார்க்கவேயில்லை.' இது ஸுராகாவை வியப்பில் ஆழ்த்தி விட்டது; மேலும், தான் எந்த மனிதரைப் பின்தொடர்ந்து கொண்டிருக்கிறேன்? என்று அவரது கண்கள் விழித்துக் கொண்டன. மேலும் தம் வாழ்நாள் முழுவதிலும் அந்த காட்சியைத் தனது நினைவிலிருந்து அவரால் அழிக்க முடியவில்லை. மாறாக, வழக்கத்திற்கு மாறான இந்தச் சம்பவம் அவரது உள்ளத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியதென்றால், அவர் அதை எப்போதும் எடுத்துரைத்து வந்தார்; மேலும் இவ்வாறு கூறிவந்தார்:

'நான் குதிரையை ஓட்டிக்கொண்டு பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எந்த அளவுக்கு அருகில் சென்றுவிட்டேன் என்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆன் ஓதும் ஒலியை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். மேலும் நான் பார்த்தேன். பெருமானார் (ஸல்) அவர்கள் வலதுபுறமோ, இடதுபுறமோ எங்குமே திரும்பிப் பார்க்கவில்லை. ஆயினும்! ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள்தான் மீண்டும், மீண்டும் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.'

அல்லாஹ்! அல்லாஹ்! இறைவனின் மீதான எத்தகைய நம்பிக்கையாகும் இது! எதிரி குதிரையை ஓட்டிக் கொண்டு எந்த அளவுக்கு அருகில் வந்துவிட்டான் என்றால், அன்னாரது குரல் அவரை சென்றடையக் கூடியதாக இருந்தது. மேலும் அன்னார் (ஸல்) அவரது அம்பின் வீச்சின் எல்லைக்குள் வந்திருந்தார்கள். ஆனால், அன்னாரோ அச்சத்தை உணர்வதைத் தவிர்த்துவிட்டு, திருக்குர்ஆனை ஓதிக் கொண்டே செல்கின்றார்கள். மறுபுறம், ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், எதிரி எவ்வளவு தூரம் அருகில் வந்துவிட்டான் என்பதைத் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இந்த நம்பிக்கை மற்றும் தவக்குலுக்கு வேறு ஏதேனும் உதாரணம் கிடைக்க முடியுமா? இந்த ஆபத்தான நேரத்தில் இத்தகைய கவனமின்மை மற்றும் அலட்சியத்தை வெளிப்படுத்திய மனிதர் யாராவது இருக்க முடியுமா? உலகளாவிய காரணிகளைப் பயன்படுத்துவது குறித்து அன்னாருக்கு எண்ணம் இருந்திருந்தால் கூட, குறைந்தபட்சம் அந்த நேரத்தில் அன்னார் (ஸல்) ஸுராகா மீது தாக்குதல் நடத்த முயன்றிருக்க வேண்டும் அல்லது அங்கிருந்து வேகமாக வெளியேற முயன்றிருக்க வேண்டும். ஆனால் அன்னார் (ஸல்) இந்த இரண்டில் எதையுமே தேர்ந்தெடுக்கவில்லை; அன்னார் (ஸல்) வேகமாக நடக்கவுமில்லை; ஸுராகாவைக் கொல்வதற்கான எண்ணமும் அன்னாருக்கு இருக்கவில்லை. மாறாக, பயம் மற்றும் பீதியின் வெளிப்பாடும் இன்றி, மிகவும் நிம்மதியாக தமது இயல்பான வேகத்தில் திருக்குர்ஆனை ஓதியவாறே சென்றார்கள். அந்த நேரத்தில் அன்னாரின் இதயத்தை இவ்வளவு பலப்படுத்தியது எது? அன்னாரின் மன உறுதியை இவ்வளவு உயர்த்திய சக்தி எது? அன்னாருக்குள் அத்தகைய அசாதாரண வாழ்க்கையை உருவாக்கிய ஆன்மா எது? இவை அல்லாஹ்வின் மீதான தவக்குலின் அற்புதங்களாக இருந்தன. அவன் மீதான நம்பிக்கையின் விளைவுகளாக இருந்தன. வெளிப்புறக் காரணிகள் தனக்கு எந்தத் தீங்கும் விளைவிக்க முடியாது என்பதை அன்னார் (ஸல்) அறிந்திருந்தார்கள். உலகியல் சக்திகள் என்னை அழிக்க முடியாது; ஏனென்றால், வானத்தில் என்னை பார்த்துக் கொண்டிருக்கும் ஓர் இறைவன் இருக்கின்றான்; அவன் இந்த அனைத்து காரணிகளையும் படைக்கக் கூடியவன் ஆவான். எனவே, காரணிகளை படைத்தவனுக்கு எதிராக காரணிகள் எதுவும் செய்துவிட முடியாது. அன்னாரது இந்த இறைநம்பிக்கை வீண் போகவில்லை. மாறாக, இறைவன் அதனைப் பூர்த்தி செய்தான். இருநூறு ஒட்டகங்களுக்கான பேராசையில் வந்திருந்த ஸுராகா அன்னாரிடம் மன்னிப்பு கேட்டுவிட்டுத் திரும்பிச் சென்று விட்டார். மேலும் இறைவன் அவருடைய உள்ளத்தில் எத்தகைய திகிலை ஏற்படுத்தினான்? என்றால், அமைதியாகத் திரும்பிச் செல்வதில்தான் தனது பாதுகாப்பு உள்ளது என்று அவர் கருதினார். அதுமட்டுமின்றி, பின்தொடர்ந்து வந்தவர்களையும் அவர் திருப்பி அனுப்பினார். இது எப்படிப்பட்ட தவக்குல் என்றால், இது ஒரு பொய்யான மனிதனிடம் இருக்க முடியாது. மேலும், இது வஞ்சகமான இதயத்தில் தங்க முடியாத தவக்குல் ஆகும். மேலும், இது எத்தகைய தவக்குல் என்றால், உலகில் இதற்கு நிகரான ஓர் உதாரணம் கிடைப்பதில்லை.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களிடமிருந்தும் கூட ஒரு சந்தர்ப்பத்தில் இது போன்ற தவக்குலின் உதாரணம் கிடைக்கிறது. ஆனால், அந்த உதாரணம் இதை விட மிகவும் தாழ்ந்ததாகும். ஏனெனில், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் தோழர்கள் ஃபிர்அவ்னின் கூட்டத்தினரைப் பார்த்து, (இன்னா லமுத்ரகூன்) 'நிச்சயமாக நாம் பிடிபட்டுவிடுவோம்' என்று கூறினார்கள். அதற்கு, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் பதிலளிக்கும் விதமாக, 'நிச்சயமாக என் இறைவன் என்னுடன் இருக்கிறான்; அவன் எனக்கு வழி காட்டுவான்' என்று கூறினார்கள். (அஷ்ஷுஅரா: 63)

ஆனால், பெருமானார் (ஸல்) அவர்களின் தவக்குல் எந்த அளவிற்கு முழுமையானதாக இருந்ததென்றால், அது அன்னாரின் தோழர் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஹஸ்ரத் அபூ பக்கர் (ரலி) அவர்கள், மூஸா (அலை) அவர்களின் சமூகத்தினரைப் போல பதறிப்போய், நாம் நிச்சயமாகப் பிடிபட்டுவிடுவோம் என்று கூறவில்லை. மாறாக, குகையில் அமர்ந்து கொண்டும், (அனைத்தையும்) கண்ட பிறகும் கூட, 'அவர்கள் கீழே (குனிந்துப்) பார்த்தால் (நம்மைக்) கண்டு விடுவர்' என்று மட்டுமே அன்னார் (ரலி) கூறினார்கள். அப்போது நபித்துவ ஒளி அன்னாரின் இதயத்தில் பாய்ச்சிக் கொண்டிருந்த தவக்குலின் விளைவாக அந்த ஈமான் இருந்தது.

இரண்டாவதாக, ஹஸ்ரத் மூஸா (ரலி) அவர்களுடன் ஒரு படையும் இருந்தது. அவர்களுக்கு முன் தப்பியோடிச் செல்வதற்கான இடமும் நிச்சயமாக இருந்தது. ஆனால், பெருமானார் (ஸல்) அவர்களுடன் எந்தக் கூட்டமும் இருக்கவில்லை. மேலும், அன்னாருக்கு முன் வேறு எந்த வழியும் இருக்கவில்லை. (நூல்- ஸீரத்துன் நபி (ஸல்) அவர்கள், அன்வாருல் உலூம், தொகுதி 1, பக்கம் 491 முதல் 496 வரை).

எனவே, இதுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தவக்குலின் உயர்ந்த நிலையாகும். காரணிகளை ஏற்பாடு செய்வதும், பயன்படுத்துவதும், பின்னர் அல்லாஹ் மீது தவக்குல் வைப்பதும் இவை அவசியமான விஷயமாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தவக்குலைக் குறிப்பிடும்போது, இந்த அம்சத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத்

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

(ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்:

எந்த நபருக்கு இறைவன் மீது உறுதியான நம்பிக்கை இருக்குமோ, மேலும் அத்துடன் தன்னை இறைவன் ஒரு சிறப்பான நோக்கத்திற்காகவே படைத்தான் என்ற உறுதியும் இருக்குமோ, அந்த நபரால் எப்படி (தனது) செயல்பாட்டைக் கைவிட முடியும்? அவர்தான் எல்லாரையும் விட மிகவும் அதிகமாகச் செயல்படுபவராக இருப்பார். முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் செயல்கள் அன்னாரின் ஈமானின் காரணமாக அமைந்திருந்தன. ஏனெனில், ஓர் இறைவன் இருக்கின்றான் என்றும், அவன் தன்னை ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் படைத்துள்ளான் என்றும் எந்த நபர் நம்புகிறாரோ, அவர் அந்த நோக்கத்தை அடைவதற்கான முயற்சியையும் செய்கின்றார்.

எனவே பாருங்கள்! முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எங்கு ஈமானை வெளிப்படுத்துகிறார்களோ, மேலும், எங்கு ஸவ்ர் குகையில் அமர்ந்து கொண்டு, 'அபூ பக்ரே! அல்லாஹ் நம்முடன் இருக்கிறான்; அவன்தான் நம்முடைய பாதுகாவலன் ஆவான்' என்று ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களிடம் கூறுகின்றார்களோ, அங்கு அதேநேரம் அன்னார் (ஸல்) மார்க்கத்தின் மற்ற காரியங்களில் இரவு, பகலாக எந்தளவிற்கு மும்முரமாக ஈடுபடுகிறார்கள் என்றால், இறைவனின் அனைத்துப் பணிகளும் அன்னாரிடமே ஒப்படைக்கப்பட்டுவிட்டது போன்று தோன்றுகிறது. எனவே, ஒருபுறம் அன்னாருக்கு இறைவன் இருக்கிறான் என்றும், மேலும் அவன் தனது அடியார்களுக்கு உதவி செய்கிறான் என்றும் நம்பிக்கை இருந்தது. மறுபுறம் அன்னார் (ஸல்) இறைவனை பரிசோதித்துப் பார்க்கவில்லை. 'நான் உமக்கு வெற்றியைத் தருவேன் என்று இறைவன் கூறிவிட்டான்' என்பதற்காக அன்னார் (ஸல்) கைகளை கட்டிக் கொண்டு அமர்ந்து கொண்டு, 'இனி வெற்றிக்கு முயற்சி செய்ய என்ன தேவை இருக்கிறது?' என்று கேட்கவில்லை. அல்லாஹ் தனது வாக்குறுதியின்படி தானே வெற்றியை வழங்கிவிடுவான் என்று அன்னார் (ஸல்) கருதவில்லை. மாறாக வெற்றிக்காக முயற்சியும் செய்கின்றார்கள்.

எனவே, அன்னார் (ஸல்) மக்களுக்குப் போர்க் கலைகளைக் கற்பிக்கின்றார்கள்; 'படைக்கு பயிற்சியளிக்கின்றார்கள்.' எதிரியை எதிர்கொள்ள படைகளைத் திரட்டுகின்றார்கள். வாகனங்களுக்கு ஏற்பாடு செய்கின்றார்கள். ஆயுதங்களைச் சேகரிக்கின்றார்கள். வீரர்களின் உணவு மற்றும் தங்குமிடம் போன்றவற்றுக்கு ஏற்பாடு செய்கின்றார்கள். பின்னர் இந்த ஏற்பாடுகள் அனைத்தையும் பூர்த்தி செய்த பிறகு, எதிரியுடன் போராடுவதற்காக செல்கின்றார்கள். மேலும், எதிரிகள் அதிகமாகவும், தோழர்கள் குறைவாகவும் இருக்கும் ஒரு சமயம் வரும்போது, 'நாம் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் நாம்தான் வெற்றி பெறுவோம்' என்று அன்னார் (ஸல்) மிகுந்த உறுதியோடும், நம்பிக்கையோடும், விசுவாசத்தோடும் கூறுகின்றார்கள்.

எனவே, எந்த அளவுக்கு மனித முயற்சிகளை செய்ய முடியுமோ, அந்த அளவு அனைத்து முயற்சிகளையும் அன்னார் (ஸல்) மேற்கொள்கின்றார்கள். பின்னர் வல்ல அல்லாஹ் மீது முழுமையாக நம்பிக்கை வைத்து வந்தார்கள். எனவே, அன்னாரது ஈமான் என்பது அறிவீனம் மற்றும் சோம்பல் கொண்ட ஈமானாக இருக்கவில்லை. மாறாக, அன்னாரது ஈமான் நேரடி சாட்சியைக் கொண்ட ஈமானாக இருந்தது. மேலும், ஒரே நேரத்தில் இறைநம்பிக்கையும் கொண்டு, அமலும் செய்கின்ற நபருடைய ஈமான்தான் கண்கூடான ஈமானாக இருக்கும்; அதாவது, ஒருவகையில் செயல் மற்றும் இறைநம்பிக்கை ஆகிய இரண்டையும் ஒருங்கே கொண்டவராக அவர் இருப்பார்.
(உஸ்வாயே ஹஸ்னா, அன்வாருல்-உலூம், தொகுதி 17, பக்கம் 97-98)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

நம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது புனித மக்காவில் பதிமூன்று ஆண்டுகள் வரை நீடித்த அந்த சோதனைக் காலத்தின் வரலாற்றைப் படிப்பதன் மூலம் இந்த விஷயம் மிகவும் தெளிவாக தெரிய வருகிறது. அதாவது, சோதனைக் காலங்களில் ஒரு முழுமையான உண்மையாளர் வெளிப்படுத்த வேண்டிய அந்த நற்பண்புகளை - அதாவது அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை வைத்தல், சஞ்சலத்திலிருந்தும், பதற்றத்திலிருந்தும் விலகி இருத்தல், தமது பணியில் சோம்பலின்றி இருத்தல், எவரின் அச்சத்திற்கும் அஞ்சாதிருத்தல் ஆகிய நற்பண்புகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அளவிற்கு வெளிப்படுத்திக் காட்டினார்கள் என்றால் அந்த உறுதியைக் கண்டு காஃபிர்களும் ஈமான் கொண்டனர். மேலும்,ஒருவருக்கு இறைவன் மீது முழுமையான நம்பிக்கை இல்லாத வரை இந்த உறுதிப்பாட்டையும், இந்த முறையில் துன்பங்களைச் சகித்துக் கொள்வதையும் அவரால் மேற்கொள்ள முடியாது' என்று சாட்சியமளித்தனர்.
(இஸ்லாமி உஸூல் கி ஃபிலாஸஃபி, ரூஹானீ கஸாயின், தொகுதி 10, பக்கம் 447)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் மீது முழுமையான தவக்குல் வைத்தவாறு உலகியல் காரணிகளையும் பயன்படுத்தி வந்தார்கள்.

இது குறித்து நான் கூறியது போல பல சம்பவங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. எனவே, இது தொடர்பான ஒரு ஹதீஸும் உள்ளது. ஹஸ்ரத் உபை இப்னு கஅப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும், அன்னாரின் ஸஹாபிகளும் மதீனாவுக்கு வந்தபோது, அன்ஸார் ஸஹாபிகள் அவர்களுக்கு அடைக்கலம் அளித்தனர். இதனால் அரேபியர்கள் அனைவரும் அவர்களுக்கு எதிராக ஒன்றுபட்டனர். முஸ்லிம்களின் நிலை எவ்வாறு இருந்ததென்றால், அவர்கள் ஆயுதங்கள் இன்றி இரவு பொழுதைக் கழிக்க மாட்டார்கள். ஆயுதங்கள் தம்முடன் இல்லாத நிலையில் காலைப் பொழுதை அடைய மாட்டார்கள். அதாவது இரவும், பகலும் அவர்களின் கரங்களில் ஆயுதம் இருந்தது. (அல்-முஸ்தத்ரக் அலஸ்-ஸஹீஹைன், தொகுதி 2, பக்கம் 435, கிதாபுத்-தஃப்ஸீர், பாபுத் தஃப்ஸீர் சூரா அன்-நூர், ஹதீஸ் 3512, தாருல் குதுபில் இல்மிய்யா, பெய்ரூத் 2002ம் ஆண்டு பதிப்பு).

அவர்கள் தூங்கும்போதும், விழித்திருக்கும்போதும் எப்போதும் ஆயுதங்களைத் தங்களுடன் வைத்திருந்தனர். அல்லாஹ்வின் மீதான முழுமையான நம்பிக்கையும் இருந்தது, அதே நேரத்தில் எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தப்படலாம் என்பதால் விழிப்புடனும், எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும். பாதுகாப்பிற்கான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும் என்ற நிலையிலும் இருந்தனர்.

இதற்கான விளக்கம் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடமிருந்தும் ஓர் அறிவிப்பில் கிடைக்கிறது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வருகை தந்தபோது ஓர் இரவு முழுவதும் அன்னார் (ஸல்) விழித்திருந்தார்கள். பின்னர் அன்னார் (ஸல்) கூறினார்கள்: 'என் ஸஹாபிகளில் எவரேனும் ஒரு நல்ல மனிதர் இன்றிரவு எனக்கு காவல் காக்க வேண்டுமே!'

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் இதே நிலையில் இருந்தபோது, திடீரென ஆயுதங்களின் சத்தம் கேட்டது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'யார் அது?' என்று கேட்டார்கள். 'நான் ஸஅத் பின் அபீ வகாஸ் ஆவேன்' என்று பதில் வந்தது. 'இங்கு வருவதற்கு உம்மைத் தூண்டியது எது?' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, 'உங்களைப் பாதுகாப்பது குறித்து என் மனதில் சிந்தனை வந்தது; எனவே கவலை ஏற்பட்டது; அதனால்தான் நான் தங்களைப் பாதுகாப்பதற்காக வந்துள்ளேன்' என்று அவர் கூறினார். உடனே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவருக்காக துஆ செய்தார்கள். பின்னர் அன்னார் (ஸல்) நிம்மதியாகத் தூங்கினார்கள்.

மற்றோர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களே இதே சம்பவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்:

நான் ஆயுதங்களின் சத்தத்தைக் கேட்டேன்.'யார் அது?' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, 'நாங்கள் ஸஅதும், ஹுஸைஃபாவும் ஆவோம்; இரு நபர்கள் இருந்தனர். அதில் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. நாங்கள் தங்களைப் பாதுகாப்பதற்காக வந்துள்ளோம்' என்று அவர்கள் கூறினர். பின்னர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் உறங்கினார்கள். எந்தளவென்றால் அன்னார் (ஸல்) வேகமாக மூச்சுவிடும் சத்தத்தை நான் கேட்டேன். இதற்கிடையில் இந்த வசனம் இறங்கியது. அதாவது வேகமான மூச்சு இருந்தது. வஹீ அருளப்படும் போதெல்லாம் அன்னாருக்கு இத்தகைய நிலை இருந்து வந்தது.

ஆக, அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: இந்தச் சந்தர்ப்பத்தின் போது வல்லாஹு யஃஸிமுக மினன் நாஸ் (மேலும் அல்லாஹ் தங்களை அந்த மக்களிடமிருந்து காப்பாற்றுவான்) என்ற இந்த வசனம் அருளப்பட்டது.

பின்னர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தமது கூடாரத்திலிருந்து தலையை வெளியே நீட்டிக் கூறினார்கள்: 'மக்களே! இப்போது திரும்பிச் சென்று விடுங்கள். அல்லாஹ் எனது பாதுகாப்புப் பொறுப்பை



(தானே) ஏற்றுக் கொண்டிருக்கின்றான்'.(அல்-ஜாமிமுல் அஹ்காமுல் குர்ஆன் (தஃப்ஸீர் குர்துபி), ஸீரத் அல் மாயிதாவின் 68வது வசனம், பக்கம் 1104, தாரு இப்னு ஹஸ்ம்)

பாதுகாப்பிற்கான உறுதி கிடைக்கப் பெறும் வரை, மேலும் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து முன்னறிவிப்பு கிடைக்கும் வரை, அன்னார் (ஸல்) காவலர்களை (பாதுகாப்புப் பணியில்) அமர்த்தினார்கள். மேலும் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து உறுதிப்பாடு வழங்கப்பட்ட பின்னர், 'நீங்கள் செல்லுங்கள்; இனி அல்லாஹ் என்னைப் பாதுகாப்பான்' என்று அன்னார் (ஸல்) கூறிவிட்டார்கள்.

கண்ணியமிக்க அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பல்வேறு பேரரசர்களுக்கு தப்லீஃக் கடிதங்களை அனுப்பியபோது, பாரசீகப் பேரரசர் கிஸ்ரா மிகுந்த பெருமையுடன் அன்னாரது கடிதத்தை துண்டு துண்டாகக் கிழித்தெறிந்தான். இது குறித்து அன்னாருக்கு தெரிய வந்தபோது, முழுமையான இறை நம்பிக்கையின் விளைவாக அன்னார் (ஸல்) கூறினார்கள்: 'இறைவனே இந்த மக்களைத் துண்டு துண்டாக்கி விடுவான்.

கிஸ்ரா ஏற்கனவே யமனின் ஆளுநர் மூலமாக அன்னாரைக் கைது செய்வதற்காக இரண்டு போர் வீரர்களைக் கடிதத்துடன் முன்கூட்டியே அனுப்பியிருந்தான். அன்னார் (ஸல்) அந்தக் கடிதத்தின் உள்ளடக்கத்தைக் கேட்டறிந்தார்கள். அதில் அன்னார் (ஸல்) உடனடியாக தம்மை இந்த நபர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று எழுதப்பட்டிருந்தது.

இந்த ஆபத்தான சந்தர்ப்பத்தில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எவ்வகையிலும் பீதியடையாமல் அந்தத் தூதுவர்களிடம் கூறினார்கள்: 'இன்று இரவு இங்கேயே தங்குங்கள்; நாளை உங்களுக்குப் பதிலளிப்பேன்!. பின்னர் அடுத்த நாள் காலை அன்னார் (ஸல்) அந்தப் பிரதிநிதிகளிடம், 'நீங்கள் திரும்பிச் சென்று, உங்கள் தலைவரான யமனின் ஆளுநரிடம் கூறுங்கள்' என்று கூறினார்கள்.

அதாவது யமனின் ஆளுநர் மூலமாகவே பேரரசர் அந்தச் செய்தியை அனுப்பியிருந்தார். கூறினார்கள்:

'அவரிடம் சென்று கூறுங்கள்: என் இறைவன் இன்றிரவு உமது இறைவனான கிஸ்ராவை கொன்றுவிட்டான்' என்று கூறுங்கள். அந்த மக்கள் இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்து விட்டனர்; மேலும் திரும்பிச் சென்று விட்டனர். பின்னர் தெரியவந்தது என்னவென்றால், அதே இரவில் குஸ்ரு பர்வீஸ் தனது மகன் ஷிரூயா (Siroes) என்பவரால் கொல்லப்பட்டிருந்தான்.(நூல் ஸீரத்துன் நபிய்யீன் (ஸல்) அவர்கள், பக்கம் 815-816)

இந்த மகத்தான நிகழ்வு அல்லாஹ்வின் அற்புதமான பாதுகாப்பு மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிகரற்ற இறை நம்பிக்கையின் வெளிப்பாடாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழுமையான இறை நம்பிக்கையுடன் அல்லாஹ்வின் அனுமதியோடு போர்களுக்குச் செல்லும்போது, புறப்படும் நேரத்தில் துஆவும் செய்து வந்தார்கள்.

இது குறித்து ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் போருக்காகப் புறப்படும்போது, அல்லாஹும்ம அன்த அளுத்தீ வ அன்த நஸீரீ வ பிக உகாதில் என்று கூறுவார்கள்:

பொருள்: 'அல்லாஹ்வே! நீயே எனது கரம் ஆவாய்! மேலும் நீயே! எனது உதவியாளன் ஆவாய்; மேலும், உன் மூலமாகவே நான் போரிடுகிறேன்.'(ஸுனன் திர்மிதி, அப்வாபுத் தஃவாத், பாப் ஃபித் துஆ இதா அக்னா, ஹதீஸ்: 3584)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:'மனிதனுக்கு சிரமங்களின் போது வேதனை ஏற்படவே செய்கின்றது. ஆயினும், அவன் ஒருபோதும் இறை நம்பிக்கையை கை நழுவ விட்டு விடக் கூடாது.'

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் பத்ர் போர் சந்தர்ப்பத்தின்போது கடுமையான துன்பம் ஏற்பட்டது. எனவே அன்னார் (ஸல்) 'யா ரப்பி இன் அஹ்லக்த ஹாதிஹில் இஸாப்த ஃபலன் துஃபத ஃபில் அர்ழி அபதா' என்று துஆ செய்தார்கள்.

பொருள்: 'என் இறைவா! இந்தக் கூட்டத்தை நீ அழித்துவிட்டால்,பின்னர் பூமியில் உன்னை யாரும் எப்போதும் வணங்க மாட்டார்கள்.'

ஆனால், அன்னாரது இந்தப் பதற்றம் மனித இயல்பின் தேட்டமாக மட்டுமே இருந்தது; ஏனெனில் மறுபுறம், அன்னார் (ஸல்) அல்லாஹ்வின் மீதான முழுமையான நம்பிக்கையை ஒருபோதும் கைவிட்டிருக்கவில்லை. பார்வை வானத்தை நோக்கியிருந்தது. மேலும் வல்ல இறைவனாகிய அல்லாஹ் தன்னை ஒருபோதும் வீணாக்க மாட்டான் என்ற உறுதி இருந்தது. ஏமாற்றம் மற்றும் அவநம்பிக்கையை நெருங்க விடவில்லை. இதுபோன்ற பதற்றங்கள் தோன்றுவது என்பது மனித ஒழுக்கங்கள் மற்றும் படித்தரங்களின் முழுமைத் தன்மைக்கு அவசியமானதாகும். ஆனால் மனிதன் அவநம்பிக்கையை தன்னை நெருங்க விடக் கூடாது; ஏனெனில் ஏமாற்றமும், அவநம்பிக்கையும் 'நிராகரிப்பாளர்களின் பண்பாகும்.' மனிதனுக்கு விதவிதமான எண்ணங்களின் மூலமாக பதற்றமும், சந்தேகங்களும் ஏற்படுகின்றன. ஆனால் ஈமான் அந்த ஐயங்களை அகற்றிவிடுகிறது. மனித இயல்பு பதற்றத்தை விலைக்கு வாங்குகிறது, மேலும் ஈமான் அதை அகற்றி விடுகிறது.' (மல்ஃபூஸாத், தொகுதி 4, பக்கம் 271-272, 2022 பதிப்பு)

பின்னர், அல்லாஹ் மீது முழுமையான நம்பிக்கை கொள்வது தொடர்பான பிரபலமான இந்த சம்பவம் இருக்கிறது. அது என்னவென்றால், அன்னாரை தனியாகக் கண்ட ஓர் எதிரி அன்னார் (ஸல்) மீது வாளை ஓங்கினான். ஆனால், அன்னார் (ஸல்) எந்தவிதப் பதற்றமும் இன்றி, அல்லாஹ் உன்னிடமிருந்து என்னைப் பாதுகாப்பான்' என்று கூறினார்கள். (ஸஹீஹ் புஹாரி, கிதாபுல் மகாஸீ, பாப் கஸ்வத்து தாதிர் ரிஹாஃ, ஹதீஸ்: 4135 - மொழிபெயர்ப்பு நூல், தொகுதி 8, பக்கம் 293-294)

இச்சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் தமது சொந்த நடையில் எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்:

'அல்லாஹ் மீது கொண்டிருந்த தவக்குலின் நிலை எவ்வாறிருந்தது என்றால், ஒருவன் அன்னாரைத் தனியாக இருப்பதைக் கண்டு அன்னார் (ஸல்) மீது வாளை உயர்த்தினான்; மேலும், "என்னிடமிருந்து உம்மைக் காப்பாற்றக்கூடியவர் யார்?' என்று அவன் அன்னாரிடம் கேட்டான்.

அந்த நேரத்தில், அன்னார் (ஸல்) ஆயுதமின்றி இருந்தார்கள். மேலும், அன்னார் (ஸல்) படுத்துக் கொண்டிருந்த காரணத்தால் நகரக் கூட முடியாத நிலையிலும் இருந்தார்கள். அவ்வாறிருந்தபோதிலும், அன்னார் (ஸல்) மிக அமைதியாகவும், நிதானமாகவும் 'அல்லாஹ்!' என்று பதிலளித்தார்கள். அன்னாரது ஈமானின் உயர்வையும், அன்னாரது நம்பிக்கையின் முழுமைத்தன்மையையும் அந்த நிராகரிப்பாளரின் இதயமே ஒப்புக் கொள்ளும் அளவுக்கு இந்த வார்த்தை அன்னாரது வாயிலிருந்து உறுதியோடும், நம்பிக்கையோடும் வெளிவந்தது. இதனால் அவனது கையிலிருந்து வாள் கீழே விழுந்தது, அன்னாரைக் கொலை செய்வதற்காக வந்தவன் அன்னாருக்கு முன்னால் ஒரு குற்றவாளியைப் போல் நின்றுவிட்டான். (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20, பக்கம் 386)

அஹ்ஸாப் போரின் போது முஸ்லிம்களுக்கு மிகவும் நெருக்கடியான நாட்களாக இருந்தன. மதீனாவில் தங்கியிருந்தவாறே எதிரியை எதிர்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. இது எவ்வித பயத்தினாலோ அல்லது அல்லாஹ்வின் மீதான நம்பிக்கைக் குறைவின் காரணத்தினாலோ இருக்கவில்லை. மாறாக, போர் உத்தியின் அடிப்படையில் அமைந்திருந்தது. எதிரி உடனடியாக, திடீரென்று நடத்தும் தாக்குதலிலிருந்து இந்த அகழின் காரணமாக தற்காத்துக் கொள்ளும் பொருட்டு மதீனாவைச் சுற்றி ஒரு அகழ் வெட்டப்பட்டது. முஸ்லிம்களின் நிலைமை எப்படி இருந்ததென்றால், அவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஏழைகளாக இருந்தனர். பெரும்பாலோர் அன்றாடக் கூலி வேலை செய்து சம்பாதிப்பவர்களாக இருந்தனர்; அவ்வாறிருப்பினும், இந்த நெருக்கடியான சூழ்நிலையில் அந்தத் தாக்குதல்களிலிருந்து தற்காத்துக் கொள்ளும் பொருட்டு அனைவரும் ஒன்றிணைந்து இந்த அகழ் வெட்டும் பணியில் பங்கெடுத்தனர். தினசரி வேலைக்குச் செல்ல முடியாதவர்கள் கூட பசியுடன் இருந்து கொண்டு பணி செய்தனர். அப்போது அரேபியாவின் ஏராளமான கோத்திரத்தாரும் ஒன்றிணைந்து தாக்குதல் தொடுத்தனர்.

பல்வேறு அறிவிப்புகளில் அவர்களின் எண்ணிக்கை வெவ்வேறுவிதமாகக் கூறப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், குறைந்தபட்ச எண்ணிக்கை பத்தாயிரம் என்றும், சில இடங்களில் பதினைந்தாயிரம் என்றும், வேறு சில இடங்களில் இருபத்தி நான்காயிரம் என்றும் கூறப்பட்டுள்ளது. மதீனாவின் மக்கள் தொகையின் அடிப்படையில் படையெடுத்து வந்தவர்களின் பத்தாயிரம் என்ற எண்ணிக்கை கூட மிகப் பெரிய எண்ணிக்கையாக இருந்தது. இந்த சிறிய நகரைப் பொறுத்த வரை அது மிகப் பெரிய இராணுவமாக இருந்தது. (நூல் ஸீரத் காத்தமுன் நபிய்யீன், ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ., (ரலி) பக்கம் 574)

எப்படியிருப்பினும், முஸ்லிம்கள் தங்கள் நெருக்கடியான மற்றும் ஏழ்மையான சூழ்நிலைக்கு மத்தியிலும், எண்ணிக்கையில் குறைவாக இருந்தபோதிலும் இத்தகைய மிகப் பெரிய படையை எதிர்கொள்ள

தயாராக இருந்தனர். குறைந்த எண்ணிக்கையில் இருப்பதால் நகருக்குள் இருந்தபடியே எதிர்கொள்ள வேண்டும் என்பது ஒரு போர் உத்தியாக இருந்தது. இதுவும் அல்லாஹ்வின் அருளாக இருந்தது. அல்லாஹ் முன்கூட்டியே எச்சரித்திருந்தான். முஸ்லிம்களின் ஈமான் வலிமையும் பெற்றிருந்தது. மேலும், எதிரிகளின் பெருந்திரளான எண்ணிக்கையைக் கண்டு முஸ்லிம்கள் கலங்கவில்லை; மாறாக, பெருமானார் (ஸல்) அவர்களின் (அல்லாஹ்வின் மீதான) முழுமையான நம்பிக்கையோ, அந்தச் சமயத்தில் முஸ்லிம்களின் நம்பிக்கையை மேலும் அதிகரிக்கச் செய்து விட்டது. மேலும் எதிர்ப்பாளர்கள் மற்றும் நயவஞ்சகர்களின் பேச்சுக்களை செவியுற்ற போதிலும், அவர்களின் தைரியம் குலையவில்லை.

அடுத்து பாருங்கள்! உறுதியோடும் அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கையின் விளைவாக, வல்ல அல்லாஹ் எத்தகைய ஏற்பாட்டைச் செய்தான் என்றால், ஒரு சூறாவளியும், புயலும் நிராகரிப்பாளர்களை பயமுறுத்தி விட்டது. அவர்கள் தப்பியோடி விட்டனர். மேலும், எத்தகைய அவசர கோலத்தில் தப்பியோடினர் என்றால், அவர்கள் தங்களது பெரும்பாலான உணவுப் பொருட்களையும் அங்கேயே விட்டுவிட்டுச் சென்று விட்டனர். மேலும் அவை முஸ்லிம்களுக்கு பயன்பட்டன.

ஆக, இதுதான் அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையின் விளைவாக இருந்தது.

அஹ்ஸாப் போரில் சிறிதளவு உணவு ஒரு முழுப் படையினருக்கும் போதுமானதாக அமைந்த நிகழ்வும் கிடைக்கிறது. அது எங்கு ஓர் அற்புதமாக உள்ளதோ, அங்கு அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையின் ஒரு மகத்தான உதாரணமாகவும் விளங்குகிறது.

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் அல்-அன்ஸாரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் அகழ் போரின் நாளில் பூமியைத் தோண்டிக் கொண்டிருந்தபோது, ஒரு கடினமான பாறை எங்கள் முன்னால் வந்தது. எனவே அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்று, அகழில் ஒரு பாறை (இடையே) வந்துவிட்டது என்று முறையிட்டனர். அப்போது, 'நான் இறங்குகிறேன் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

அதாவது அதனை உடைக்க நான் வருகிறேன்' என்று கூறினார்கள். அன்னார் (ஸல்) எழுந்தார்கள், அப்போது அன்னாரின் வயிற்றில் ஒரு பாறை கட்டப்பட்டிருந்தது. வெறும் வயிறுடன் இருந்த காரணத்தினால் அக்காலத்தில் பசியின் கொடுமையைத் தாங்கிக் கொள்வதற்காகப் கற்களைக் கட்டிக் கொள்வார்கள்.

மேலும், மூன்று நாட்களாக நாங்கள் எதையும் சுவைத்திருக்கவில்லை;

பட்டினியின் நிலை இத்தகையதாக இருந்தது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மண்வெட்டியை எடுத்து, அந்தப் பாறையின் மீது தாக்கினார்கள்; அது சரிந்து பரவிய மணல் குவியலாக மாறிவிட்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இத்தகைய நிலையைக் கண்டு, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கு வீடு வரை செல்வதற்கு அனுமதி தாருங்கள்! என்று நான் கூறினேன். பின்னர் நான் சென்று எனது மனைவியிடம் கூறினேன்: ஹஸ்ரத் 'நபி (ஸல்) அவர்களிடம் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாத ஒரு காரியத்தை நான் உணர்ந்தேன். அதாவது, பசியின் காரணமாக அன்னார் (ஸல்) தமது வயிற்றில் கற்களைக் கட்டிக் கொண்டிருப்பதை நான் கண்டேன். எனவே உம்மிடம் ஏதேனும் உணவு உள்ளதா?' என்று நான் கேட்டேன். அதற்கு, 'கொஞ்சம் பார்லியும் (வாற்கோதுமை) ஒரு சிறிய ஆட்டுக்குட்டியும் உள்ளது' என்று அவர் கூறினார். உடனே நான் அந்த ஆட்டுக்குட்டியை அறுத்தேன்; அவர் பார்லியை அரைத்தார், நாங்கள் இறைச்சியை ஒரு கல் பானையில் போட்டோம். பின்னர் நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்றேன். அப்போது மாவு பிசைந்து புளிக்க வைக்கப்பட்டிருந்தது. பானையும் அடுப்பில் வெந்து கொண்டிருப்பதற்கு அருகிலிருந்தது. 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னிடம் கொஞ்சம் உணவு உள்ளது; அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எழுந்திருங்கள்; மேலும், ஒருவர் அல்லது இருவர் உணவு உண்பதற்காக உடன் வாருங்கள்.

அப்போது, 'எவ்வளவு உணவு உள்ளது?' என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். நான் அன்னாரிடம் விவரத்தை எடுத்துரைத்தேன். தாராளமாகும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஒரு ஆட்டுக்குட்டியின் இறைச்சி உள்ளது; மேலும், சிறிதளவு பார்லியும் உள்ளது. இது ஒன்றும் குறைவானதல்ல. அதிகமான உணவாகும்.' தாராளமாகும். சிறப்பானதாகும்.

பின்னர், 'நான் வரும் வரை பானையை இறக்க வேண்டாம் என்றும், அடுப்பிலிருந்து ரொட்டியை எடுக்க வேண்டாம் என்றும் உங்கள் மனைவியிடம் கூறுங்கள்' என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். பின்பு , 'எழுந்திருங்கள்!' என்று ஸஹாபிகளிடம் அன்னார் (ஸல்) கூறினார்கள். உடனே முஹாஜிர் மற்றும் அன்ஸார் ஸஹாபிகள் எழுந்து விட்டனர்.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் தமது மனைவியிடம் சென்று, 'உமக்கு நல்லது நடக்கட்டும்! ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முஹாஜிர், அன்ஸார் ஸஹாபிகள் மற்றும் தம்முடன் இருந்த அனைவரையும் அழைத்துக் கொண்டு வந்துள்ளார்கள்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உங்களிடம் ஏதாவது கேட்டார்களா?' என்று அன்னாரின் மனைவி கேட்டார். அதற்கு, 'ஆம்! கேட்டார்கள்; நான் முழு விவரத்தையும் கூறிவிட்டேன். உணவு எவ்வளவு இருக்கிறது? என்று கேட்டார்கள்; நானும் அளவைக் கூறினேன்' என்று அன்னார் (ரலி) கூறினாரார்கள்.

பின்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஸஹாபிகளை தம்முடன் அழைத்துக் கொண்டார்கள்; மேலும், 'உள்ளே செல்லுங்கள்! அவசரப்பட வேண்டாம்; அதாவது வேகம் காட்ட வேண்டிய அவசியமில்லை. அமைதியாக வீட்டிற்குள் சென்று அமருங்கள்!' என்று கூறினார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் ரொட்டிகளைத் துண்டுகளாக்கி, அதன் மேல் இறைச்சியை வைத்து தோழர்களுக்கு வழங்கத் தொடங்கினார்கள். துணியால் ரொட்டி மூடப்பட்டிருந்தது. அதனை ஒரு துண்டு துண்டாக்கினார்கள். மேலும் அதனை எடுத்து, அதன் மீது சிறிது குழம்பை ஊற்றி, ஸஹாபிகளுக்கு வழங்கிக் கொண்டிருந்தார்கள். பானையிலிருந்தும், அடுப்பிலிருந்தும் ஒன்றை எடுக்கும் போதெல்லாம் அதை மூடிவிடுவார்கள். ஸஹாபிகள் அனைவரும் திருப்தியடையும் வரை இவ்வாறு தொடர்ந்து செய்து கொண்டிருந்தார்கள். அனைவரின் வயிறும் நிறைந்து விட்டது. மேலும் சிறிது உணவு மீதமும் இருந்தது.

எனவே இதை எடுத்துக் கொள்ளுங்கள்; மேலும் இதனை உண்ணுங்கள் ; மேலும் அன்பளிப்பாக அனுப்புங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்களின் மனைவியிடம் கூறினார்கள். ஏனெனில், ஏராளமான மக்கள் பசியுடன் இருந்தனர்.

(ஸஹீஹுல் புஹாரி, கிதாபுல் மகாஸீ, பாப் கஸ்வதுல் கன்தக், ஹதீஸ் எண் 4101, மொழிபெயர்ப்பு தொகுதி 8, பக்கம் 240-241).

ஆக, இது முழுமையான நம்பிக்கையாகவும் இருந்தது. அத்துடன் இதில் அருளுக்கான துஆவும் இருந்தது. எனவே அதில் பரக்கத் ஏற்பட்டு விட்டது.

அடுத்து, மற்றோர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் பராஃ பின் ஆஸிப் (ரலி) அவர்களிடம், 'ஹுனைன் போரின்போது நீங்கள் அல்லாஹ்வின் தூதரை (ஸல்) விட்டுவிட்டு ஓடிப்போய்விட்டீர்களா?' என்று ஒரு நபர் கேட்டார். அதற்கு, 'ஆம்! ஆனால் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களோ போர்க்களத்தை விட்டு ஓடவில்லை' என்று அன்னார் (ரலி) கூறினார்கள். ஹவாஸின் கோத்திரத்தார் அம்பெறிவதில் வல்லவர்களாக இருந்தனர். அவர்களுடன் எங்களுக்கு மோதல் நிகழ்ந்தபோது, அவர்கள் மீது நாங்கள் தாக்குதல் தொடுத்தோம். அவர்கள் தோல்வியுற்றனர். முஸ்லிம்கள் போர்ச் செல்வங்களை ஒன்றுதிரட்டத் தொடங்கினர். ஆனால் எதிரிகள் முன்பக்கத்திலிருந்து அம்புகளை மழை போல் பொழியத் தொடங்கினர். 'ஆனாலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தமது இடத்திலிருந்து நகரவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது வெள்ளை நிறக் கோவேறு கழுதையின் மீது அமர்ந்திருப்பதையும், அபூ ஸுஃப்யான் பின் ஹாரிஸ் பின் அப்துல் முத்தலிப் அதன் கடிவாளத்தைப் பிடித்திருப்பதையும் நான் கண்டேன். அப்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பின்வரும் கவிதையை கூறிக் கொண்டிருந்தார்கள்:' 'அனந் நபிய்யு லா களிப்; அன இப்னு அப்துல் முத்தலிப்' .

'நான் வாக்களிக்கப்பட்ட நபி ஆவேன்; இதில் எந்தப் பொய்மையும் இல்லை. நான் அப்துல் முத்தலிபின் மகன் ஆவேன்' (ஸஹீஹ் புஹாரி, கிதாபுல்-ஜிஹாத் வ அஸ்ஸைர், பாப் மன் காத தாபத்த கைருஹ் ஃபீ அல்-ஹர்ப், ஹதீஸ் எண் 2864, மொழிபெயர்ப்பு தொகுதி 5,

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்
தொலைபேசி எண் : 1800 103 2131
இந்த TOLL FREE எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.
தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

பக்கம் 226).

இந்தச் சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் சற்று விரிவாகவும் எடுத்துரைத்துள்ளார்கள்:

'நான் அப்துல் முத்தலிபின் மகன் ஆவேன்' என்று அன்னார் (ஸல்) கூறியதன் பொருள் என்னவென்றால், அந்த நேரத்தில் எதிரியின் தாக்குதல் எந்த அளவு தீவிரமாக இருந்தது என்றால், எதிரியின் நான்காயிரம் வில்லாளர்கள் அம்புகளின் மழையைப் பொழிந்து கொண்டிருந்தனர். இந்தச் சூழ்நிலையில் நான் முன்னோக்கிச் செல்வது மனிதகுலத்தின் மகிமைக்கு மிகவும் உயர்வானதாகவும், அசாதாரணமானதாகவும் தெரிகிறது. எனக்கு எந்தப் பயமும் இல்லை.

எனவேதான் இந்தக் கவிதையை அன்னார் (ஸல்) படித்தார்கள். 'இதன் மூலம் யாரும் ஏமாற வேண்டாம்; என்னிடம் தெய்வீக சக்திகள் இருப்பதாக யாரும் நினைக்க வேண்டாம்; நான் அப்துல் முத்தலிபின் மகன் ஆவேன் மேலும் ஒரு சாதாரண மனிதன் மட்டுமே ஆவேன். நான் நபியாக இருக்கும் காரணத்தால் மட்டுமே அல்லாஹ்வின் உதவி என்னுடன் உள்ளது" (கவ்ஃப் அவ்ர் உம்மீத் கா தர்மியானி ரஸ்தா - அன்வாருல் உலூம், தொகுதி 19, பக்கம் 47).

அல்லாஹ் எனக்கு வெற்றிகளை வாக்களித்துள்ளான்; எனவே, இந்த அம்புகள் மழையாக இருந்தபோதிலும் அவன் எனக்கு வெற்றியை வழங்குவான் என்பது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வின் மீது இருந்த தவக்குலின் மகிமையாக இருந்தது.

அல்லாஹ்வின் மீதான தவக்குல் மற்றும் அவனது வாக்குறுதிகள் மீதான உறுதியான நம்பிக்கையின் மற்றோர் உதாரணம் இவ்வாறு கிடைக்கிறது. ஓர் அறிவிப்பில் உள்ளது. இப்போது (கூறப்பட்ட) இந்த ஆரம்பகால நிகழ்வுகளைப் பாருங்கள்! மேலும் இறுதிகால நிலையையும் பாருங்கள்! அவ்வாறு பார்க்கும்போது, ஒரே மாதிரியான தவக்குலின் உதாரணங்களை நாம் காண்கிறோம். இப்போது (கூறப்பட்ட சம்பவம்) இது ஹுனைன் போர் சம்பவமாகும் என்றால், முதல் போரான பத்ரு போரின் சம்பவமும் இவ்வாறு உள்ளது. அதாவது மதீனாவில் ஹபீப் பின் யஸாஃப் என்ற பெயரில் மிகவும் வலிமையான மற்றும் துணிச்சலான நபர் ஒருவர் இருந்தார். அந்த நேரத்தில் முஸ்லிம்களின் நிலை மிகவும் பலவீனமாக இருந்தது. இவர் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவர் மற்றும் பத்ரு போர் வரை முஸ்லிமாகியிருக்கவில்லை, ஆனால் இவரும் தனது கஸ்ரஜ் கோத்திரத்துடன் போருக்குப் புறப்பட்டார். மேலும் போரில் வெற்றி பெற்றால் போர்ச் செல்வம் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் அவருக்கு இருந்தது. இவரும் போரில் கலந்து கொள்கிறாரே! என்று முஸ்லிம்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்.

ஆனால், 'எமது மார்க்கத்தில் உள்ளவர்கள் மட்டுமே எம்முடன் போருக்கு செல்வார்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம் கூறினார்கள். நீங்கள் திரும்பிச் செல்லுங்கள்; இணைவைப்பவரின் உதவியை நாங்கள் விரும்பவில்லை என்று அன்னார் (ஸல்) கூறியதாக மற்றோர் அறிவிப்பில் வருகிறது.

ஹபீப் பின் யஸாஃப் மீண்டும் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களிடம் வந்தார். ஆனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இரண்டாவது முறையும் அவரைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். கடைசி முறை அவர் வந்தபோது, 'நீர் அல்லாஹ் மற்றும் அவனது தூதர் மீது ஈமான் கொள்கிறீரா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம் கேட்டார்கள். அதற்கு, 'ஆம்!' என்று அவர் கூறினார். அதன் பிறகு அவர் முஸ்லிமாகி விட்டார். மேலும், மிகத் துணிச்சலுடன் போரிட்டார். (அஸ்ஸீரத்துல்-ஹல்பிய்யா, தொகுதி 2, பக்கம் 204, தாருல் குதுபில்-இல்மிய்யா, பெய்ரூத், 2002-ம் ஆண்டு பதிப்பு)

எனவே, இத்தகைய பாதகமான சூழல்கள் மற்றும் அதீதத் தேவைக்கு மத்தியிலும், அந்த நபர் நிராகரிப்பின் நிலையில் இருந்தபோது அவரிடம் அன்னார் (ஸல்) உதவி பெறவில்லை. அதாவது (முஸ்லிம் அல்லாத) அந்நியர் ஒருவரிடமிருந்து உதவி பெறுவது' என்பது அல்லாஹ்வின் வாக்குறுதிகள் மற்றும் அந்த வாக்குறுதிகள் மீதான நம்பிக்கை மற்றும் தவக்குல் ஆகியவற்றுக்கு எதிரானது என்பதால் அந்த நபருடைய நிராகரிப்பின் நிலையில் அவரிடமிருந்து உதவி பெறவில்லை.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

'இக்காலத்து அறிவார்ந்த மக்களைப் பொறுத்தவரை யாரையும் தனது எதிரியாக ஆக்கிக்கொள்வது ஒரு தவறாகும். ஆனால் உண்மையைக் கூறவேண்டுமானால், இதுவும் (அன்னாரின்) உண்மைத்துவத்திற்கான ஒரு சான்றாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எவரையும் விட்டுவைக்கவில்லை', அதாவது, அப்போது இருந்த அனைவரும் அன்னாரின் எதிரியாக ஆகிவிட்டார்கள். உண்மையைக் கூறியதால்,' அனைவருடனும் பிணக்கு ஏற்பட்டது.' ஏனெனில் உண்மையைச் செவிமடுக்க எவரும் விரும்புவதில்லை. எனவே மக்களுடன் மோதல் ஏற்படுவது தவிர்க்க முடியாததாக இருந்தது. '

இந்த மக்களைப் பொறுத்தவரை, நவூதுபில்லாஹ்! அன்னார் (ஸல்) தவறிழைத்து விட்டார்கள். இருப்பினும் இறைவனுக்காக மட்டுமே அனைவருடனும் மோதுவது என்பது அன்னாரின் உண்மைத்துவத்திற்கு மிகச் சிறந்த சான்றாக உள்ளது. இதன் மூலம் அன்னாரது ஈமானிய பலம் என்னவென்று தெரிய வருகிறது.

ஒருபுறம் 'மஸீஹின் உதாரணத்தைக் கூறி அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

பாருங்கள்! இன்ஜீலில் காணப்படுகிற அன்னாரது போதனையிலிருந்து மக்கள் ஆட்சேபனை செய்கின்றனர்.

அதாவது மக்கள் மஸீஹ் மீது ஆட்சேபனை செய்கின்றார்கள்.

அப்போது, இன்ஜீலில் காணப்படும் அந்த போதனைக்கு ஏற்பவே நான் கூறுகிறேன் என்று மஸீஹ் (அலை) கூறினார்கள்.

அன்னாரது போக்கில் ஒருபோதும் யாரையும் கோபப்படுத்த வேண்டும் என்பது இருக்கவில்லை என்று தெரிகிறது. நான் தவ்ராத்தின் ஒரு சிறு புள்ளியைக் கூட மாற்ற வரவில்லை என்று யூதர்களுக்கு கூறப்பட்டது. இதற்கு மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனையைப் பார்த்தால், அன்னார் (ஸல்) அழைப்பு விடுக்காத மற்றும் தவறை சுட்டிக் காட்டாத எந்தவொரு பிரிவும், மதமும் பூமியின் மீது தென்படாது. (மேலும் அடுத்து ஒவ்வொருவருக்கும் எதிரில் நான் வெற்றி பெறுவேன் என்றும், நானே வெற்றியாளர் என்று அன்னார் (ஸல்) வாதமும் செய்துள்ளார்கள்.)

வெறும் தவறு கண்டுபிடிக்கப்படவில்லை; போட்டியிடவில்லை. மாறாக, எனக்கு அல்லாஹ் மீது உறுதியான நம்பிக்கையும், முழுமையான தவக்குலும் உள்ளது; மேலும், இன்ஷா அல்லாஹ்! எனக்கே வெற்றிகள் (நிச்சயிக்கப்பட்டு) உள்ளன. ஏனெனில், நான் அவன் புறமிருந்து வந்துள்ளேன் என்று அன்னார் (ஸல்) வாதம் செய்தார்கள்.

சற்று கூறுங்கள்! இறைவன் மீது முழுமையான நம்பிக்கையும், உறுதியும் இல்லாத வரை எவரால் எப்போது இப்படி (வாதம்) செய்ய முடியும்?

(மல்ஃபூஸாத் தொகுதி 7, பக்கம் 39, 2022 பதிப்பு)

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின் வ பாரிக் வ ஸல்லிம் இன்னக்க ஹமீதுன் மஜீத்!

(தினசரி அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல், அக்டோபர் 9, 2026, பக்கம் 2 முதல் 8 வரை)

தமிழாக்கம்

முரப்பி

A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * * * *

உள்ளூர் ஜமாஅத் செய்திகள்

தப்லீஃக் தினம்

செயின்ட் தாமஸ் மவுண்ட் சென்னை

இறையருளால் 09.8.26 ஞாயிறு அன்று தஹஜ்ஜுத் மற்றும் ஃபஜ்ர் தொழுகைகளுக்குப் பிறகு தப்லீஃக் நிகழ்ச்சிகள் துவங்கின. மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, புழுதிவாக்கம் மஸ்ஜித் ஹாதியைச் சுற்றியுள்ள பல்வேறு கடைகளுக்குச் சென்று தப்லீஃக் செய்யப்பட்டது. மேலும் வழியில் சந்தித்த பொதுமக்களிடமும் தப்லீஃக் உரையாடல் நிகழ்ந்தது. பின்னர் புழுதிவாக்கம் இரயில் நிலையத்திற்குச் சென்று, அங்கிருந்த மக்கள் அனைவருக்கும் தப்லீஃக் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. அத்துடன் மூன்றாம் உலகப் போர் குறித்து ஹுஸூர் அன்வர் அவர்களின் தூதுச் செய்தியையும் சந்தித்த அனைவருக்கும் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் செயின்ட் தாமஸ் மவுண்ட் பொதுக் கிளை நூலகம் சென்றோம். பின்னர், வாணுவம் பேட்டை செயின்ட் ஜோட்ஸ் திருத்தல தேவாலயம் சென்று அங்கிருந்த பாதிரியார் மற்றும், மடிப்பாக்கம் காவல் ஆய்வாளர் ஆகியோரைச் சந்தித்து, ஜமாஅத் பிரசுரங்களும், ஹுஸூர் அவர்களின் தூதுச் செய்தியும் வழங்கப்பட்டது. இந்த சந்திப்பின்போது ஜமாஅத்தின் அறிமுகம் மற்றும் தூதுச் செய்தி அழகிய முறையில் அவர்களுக்கு எட்ட வைக்கப்பட்டது. அவர்களின் பல்வேறு கேள்விகளுக்கும் பதில் வழங்கப்பட்டது. இறையருளால் தப்லீஃக் தினம் உள்ளூர் ஜமாஅத்தில் சிறப்பாக நடைபெற்றது. அல்ஹம்துலில்லாஹ்!

ஜமாஅத் தலைவர்

செயின்ட் தாமஸ் மவுண்ட்

* * * * * * * * * * * * *

1-ம் பக்கத் தொடர்ச்சி..... (தஃப்ஸீரே கபீர்)

தர்பிய்யத்துடன் பெரும் தொடர்பு உள்ளது.

இந்த அம்சத்தில் ஒருபோதும் அலட்சியமாக இருக்கக் கூடாது என்பது ஒவ்வொரு நம்பிக்கையாளரின் கடமையாகும். பெரியவராக இருந்தாலும் சரி! அல்லது இளம் வயதுடையவராக இருந்தாலும் சரி! ஒவ்வொருவரும் தங்கள் பிள்ளைகளுக்கான நல்ல தர்பிய்யத்தில் மும்முரமாகி விட வேண்டும்; மேலும் தங்கள் சந்ததியினர் தங்களை விட இஸ்லாத்திற்காகத் தங்களை அர்ப்பணிக்கக் கூடியவர்கள் என்று நிரூபணமாகுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறிருந்தால் பின்னர் முஸ்லிம்களிடம் ஒருபோதும் வீழ்ச்சி ஏற்படாது.

பிள்ளைகளின் தர்பிய்யத்தில் போதிய கவனம் செலுத்தாமல் இருப்பதே ஒரு சமூகத்தின் வீழ்ச்சிக்கு பெரும் காரணமாகும். இதன் விளைவாக என்ன நிகழ்கின்றது என்றால், வெறும் எண்ணிக்கையில் பெரும்பான்மை என்பது வீணானதாக அமைந்து விடுகின்றது. மேலும், சமூகத்தின் மதிப்பு முற்றிலும் அழிந்து விடுகிறது.

எனவே, நாம் மிக முக்கியமாகக் கவனம் செலுத்த வேண்டிய அசல் விஷயம் என்னவென்றால், நமது வருங்காலத் தலைமுறையினர் நன்மை மற்றும் தக்வாவின் மைதானத்தில் நம்மை விடவும் முன்னணியில் இருக்க வேண்டும்; ஏனெனில் இதுவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெருமைப்படக்கூடிய விஷயமாகும். வெறும் (மிகுதியான) எண்ணிக்கை மட்டுமே ஒருவரைத் திருப்திப்படுத்துவதற்குப் போதுமானதாக இருக்காது.' (தஃப்ஸீரே கபீர், பாகம் 14, பக்கம் 205 -206)

* * * * * * * * * * * *



ஸீரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்கள்

நூலாசிரியர்
ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப்
எம். ஏ (ரலி)

அரேபியாவும் பண்டைய மார்க்கமும்
(சென்ற இதழின் தொடர்ச்சி...)

அரேபியாவின் சிலை வழிபாட்டாளர்களின் மார்க்க தலைமையகமாக கஃபா இருந்தது. அங்கு அவர்கள் ஏராளமான சிலைகளை ஒன்று திரட்டி வைத்திருந்தனர். மேலும், அரேபியாவின் இணை வைப்பாளர்கள் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ஆண்டுதோறும் ஹஜ்ஜுக்காக மக்காவில் ஒன்று கூடி வந்தனர். இது ஒருவகையில் இப்ராஹீமியப் போதனையின் ஓர் எஞ்சிய அடையாளமாக இருந்தது; ஆனால், ஹஜ்ஜின் சடங்குகளிலும் அவர்கள் பலவிதமான இணைவைத்தலுக்குரிய காரியங்களைச் சேர்த்திருந்தனர்; அவற்றை பின்னர் இஸ்லாம் நீக்கி விட்டது. மக்காவின் இந்த மார்க்க முக்கியத்துவத்தின் காரணமாக, மக்காவும் அதைச் சுற்றியுள்ள 'ஹரம்' பகுதியும் அனைத்து வகையான சண்டை, சச்சரவுகள் மற்றும் இரத்தக் களரிகளிலிருந்து முற்றிலும் தடைசெய்யப்பட்ட இடமாக விளங்கியது.

அதேபோல், ஹஜ் மற்றும் உம்ராவுக்காக மக்கள் வந்து செல்வதை எளிதாக அமைக்கும் நோக்கத்துடன், ஆண்டின் நான்கு மாதங்கள் அதாவது முஹர்ரம், ரஜப், துல் கஃஅதா, துல் ஹஜ் போன்ற மாதங்கள் கண்ணியத்திற்குரிய சிறப்பு மாதங்களாகக் கருதப்பட்டன. அவற்றில் கொலை, போர் அனைத்தும் நிறுத்தப்பட்டு மக்கள் அமைதியுடன் அங்குமிங்கும் சென்று வர முடிந்தது.

சிலை வழிபாட்டைத் தவிர, அரேபியாவில் நாத்தீகமும் இருந்தது. அதனைப் பின்பற்றுபவர்கள் கடவுளின் இருப்பு, மரணத்திற்குப் பின் உயிர்ப்பிக்கப்படுதல் (அதாவது மறுமை வாழ்க்கை), மற்றும் தண்டனை - வெகுமதி போன்றவற்றை நம்பவில்லை. திருக்குர்ஆனிலும் இதைப் பற்றிய குறிப்பு வருகிறது.

மேலும் அரேபியாவில் நெருப்பை வணங்குகின்ற மற்றும் நட்சத்திரங்களை வணங்குகின்ற மஜூஸிகளும் இருந்தனர்; ஆனால், அவர்களும் இறைவனின் இருப்பை ஏற்றுக் கொண்டிருந்தனர். மேலும் அவர்களின் மதத்திலும் வணக்க வழிமுறைகளும் இருந்தன. இந்த மதம் தனது மூலத்தின் அடிப்படையில் ஈரானிய மதமாகும். மேலும் உண்மையில் இது இல்ஹாமிய மார்க்கங்களைச் சார்ந்ததாக இருந்தது; ஆனால் காலப்போக்கில் மெல்ல மெல்ல சீர்கெட்டு விட்டது என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். திருக்குர்ஆனிலும் இதைப் பற்றிய குறிப்பு வருகிறது. தற்கால பார்சி சமூகம் இந்த மதத்தைப் பின்பற்றக் கூடியதாகும்.

திருக்குர்ஆனில் குறிப்பிடப்படும் மற்றொரு மதம் 'ஸாபியீன்' ஆகும். இந்த மதம் மஜூஸியிசம் மற்றும் யூத மதத்தின் கலவையாக இருந்தது. ஆனால், அரேபியர்கள் பொதுவாக தங்கள் முன்னோர்களின் மதத்தை விட்டுவிட்டு ஓரிறைக் கொள்கைக்கு இணக்கமான ஒரு மதத்தைத் தழுவிய ஒருவரை 'ஸாபி' என்று அழைத்து வந்தனர் என்பது தெரிய வருகிறது. ஆகவேதான் சில சமயங்களில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களையும் மற்றும் அன்னாருடைய தோழர்களையும் கூட 'சாபி' என்று அழைத்து வந்தனர்.

இஸ்லாம் தோன்றுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே கிறிஸ்தவ மதம் அரேபியாவில் நுழைந்துவிட்டது; சில கோத்திரத்தினர் அதைத் தழுவியும் இருந்தனர். அரேபியாவில் நஜ்ரான் பகுதி இந்த மதத்தின் ஒரு பெரும் தலைமையகமாக விளங்கியது.

அரேபியாவின் யூதர்கள் ஆரம்பத்தில் சிரியாவிலிருந்து வந்திருந்தனர்; பின்னர் அவர்களைப் பின்பற்றி வேறு சில கோத்திரங்களும் யூதர்களாக மாறியிருந்தனர். யூதர்களின் பெரும் தலைமையகமாக யஸ்ரிப் (மதீனா), கைபர் மற்றும் தைமா ஆகியவை இருந்தன.

மற்றொரு மதம் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுடன் தொடர்புடையதாக இருந்தது. அது ஓரிறைக் கொள்கைக்கான வாதங்களை முன்வைத்தது; சிலர் அதற்கு 'ஹனீஃபி' மதம் என்று பெயர் சூட்டியிருந்தனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஆரம்ப காலத்திலும், அதற்குச் சற்று முன்னரும், அரேபியர்களின் சிலர் தீவிர சிலை வழிபாட்டைக் கண்டு வெறுப்படைந்து, வரவிருக்கும் நபித்துவக் கதிர்களின் முந்தைய ஒளியைப் பெற்று இந்த மதத்தை நோக்கி ஈர்க்கப்பட்டனர். ஆனால் அரேபியாவில் இவர்களின் மொத்த எண்ணிக்கை மிகச் சில நபர்களைத் தாண்டவில்லை; இவர்கள் அனைவரும் மக்காவிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வசிப்பவர்களாக இருந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரர் ஸைத் பின் அம்ர் பின் நுஃபைல், நபி (ஸல்) அவர்களுடன் நல்ல தொடர்பு கொண்டிருந்தவர்களில் ஒருவராக இருந்தார்; ஆனால், நபித்துவ வாதம் கிடைப்பதற்கு முன்பே அவர் காலமாகிவிட்டார்.(தொடரும்.....)

(ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 59 -63)

தமிழாக்கம்

முரப்பி

A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * * *

கண்ணியத்திற்குரிய பத்ர் வாரப் பத்திரிகை காதியான் வாசகர்களின் கவனத்திற்கு

காலத்தின் இமாம் மற்றும் ஹஸ்ரத் நபிகளின் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய பராமரிப்பில் இந்த பத்திரிகை முற்றிலும் வளர்ந்தாகும் என்ற பெருமையை பத்ர் பத்திரிகை பெற்றுள்ளது. தொடக்கம் முதல் இன்று வரை, முதலில் நபித்துவத்தின் கீழும், பின்னர் நபித்துவத்தின் வழியிலான கிலாஃபத்தின் நிழலிலும் இந்த பத்திரிகை தனது தஃப்லீக் மற்றும் தர்பிய்யத் பணிகளைத் தொடர்ந்து செய்து கொண்டு செல்கிறது. இந்த பத்திரிகையின் மூலம் பல நற்பேறு பெற்ற ஆன்மாக்கள் அஹ்மதிய்யத்தில் வந்து இணைந்துள்ளன. அஹ்மதிய்யா கிலாஃபத்தின் வழிகாட்டுதல்களின் ஒளியில், இந்த பத்திரிகையின் மூலம் அஹ்மதி குடும்பங்களுக்கு தர்பிய்யத் வழங்கப்பட்டு வருகிறது; இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்திலும் நடைபெற்றுக் கொண்டே இருக்கும்.

பத்திரிகைத் தயாரித்தல், அச்சிடுதல், பேக்கிங் செய்தல் மற்றும் விநியோகித்தல் ஆகியவற்றில் பெரும் செலவுகள் ஏற்படுகின்றன. குறைந்தபட்ச சந்தா தொகையைக் கொண்டு மட்டும் இச்செலவுகளை ஈடுகட்ட முடியாது. எனவே, காலத்தின் இமாமுடைய இந்த பத்திரிகையின் செலவுகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய சிறப்பு உதவியாளர்கள் மிக அதிகமாகத் தேவைப்படுகிறார்கள். இந்த பத்திரிகைக்கு நிதி உதவி செய்பவர்களின் உதவியை அல்லாஹ் ஒருபோதும் வீணாக்க மாட்டான். ஏனெனில் உமக்கு உதவுபவர்களுக்கு நான் உதவுவேன் என்பது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். உதவியாளர்களின் அனைத்து விவகாரங்களையும் அல்லாஹ்வே பாதுகாப்பான். மேலும் தனது வாக்குறுதியின்படி அவர்களின் தொழில், வேலைவாய்ப்பு, தோட்டம், விளைச்சல் மற்றும் செல்வத்தில் பல மடங்கு பரக்கத்தையும் தருவான். இன்ஷா அல்லாஹ்!

எந்தவொரு வழிகாட்டுதலுக்கும் வாராந்திர 'பத்ர்' பத்திரிகையின் மேலாளர் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு எண்
9815639670

* * * * * * * * * * * *

திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் நினைவிலேயே உள்ளங்கள் அமைதி அடைகின்றன
. (13:29)

A. Khaleel Ahmad
(Melapalayam)

2-ம் பக்கத் தொடர்ச்சி (தலையங்கம்) .....

பாருங்கள்! அல்லாஹ் நூஹ் (அலை) அவர்களின் மகனையே பொருட்படுத்தவில்லை.

எனவே இன்னும் கூறப்போனால், ஓர் அஹ்மதியாக இருப்பதற்கு நீங்கள் தகுதியானவர்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் நீங்கள் செயல்படுங்கள்.' ஹஸ்ரத் லுக்மான் (அலை) அவர்களும் தம் மகனுக்கு மறைமுகமான இணைவைப்பிலிருந்து தவிர்ந்து இருக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் முஸ்லிம்களின் செயல் நிலையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மேலும் கூறினார்கள்: '

'லா இலாஹ இல்லல்லாஹ்' என்ற இந்த கலிமாவை (முஸ்லிம்களாகிய) அவர்கள் ஓதுகிறார்கள், ஆனால் பல்வேறு தரப்பட்ட இணைவைப்பின் நிலைகளில் அவர்கள் சிக்கியுள்ளனர்'.

இணை வைத்தலின் ஒரு வகை பொய்யின் பயன்பாடு ஆகும். இன்று மக்கள் பொய் சொல்லாமல் வாழ முடியாது என்று கருதுகிறார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மீது தொடரப்பட்ட அஞ்சலக வழக்கின் நிகழ்வைக் குறிப்பிட்டவாறு ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

'உண்மை பேசினால் தப்பிக்க முடியாது என்று மக்கள் கருதுகிறார்கள். ஆனால் நான் உண்மை பேசினேன்; அல்லாஹ் என்னைக் காப்பாற்றி விட்டான்.'

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

இன்று பொய்யுரைக்கப்பட்ட எத்தனையோ விவகாரங்கள் வருகின்றன; நாம் இதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். உண்மையில் பார்த்தால் பொய் என்பது மனித இயல்புக்கு எதிரானதாகும். ஆனால் இன்றைய உலகின் அரசியல் சூழ்நிலைகள் எவ்வாறெல்லாம் பொய் பேசப்படுகிறது என்பதை எடுத்துரைக்கின்றன. பொய்யை அடித்தளமாகக் கொண்டு பல நாடுகள் ஒன்றிணைந்து மற்றொரு நாட்டிற்கு எதிராக படையெடுக்கின்றன.

எனவே, இன்று நாம் நமது பைஅத்தின் கடமையை நிறைவேற்ற வேண்டும் என்றால், உலகில் ஒரு புரட்சியைக் கொண்டுவர வேண்டும் என்றால், பொய்க்கு எதிராக ஜிஹாத் செய்வது அஹ்மதிகளின் கடமையாகும்.'

அடுத்து, மற்றொரு தீமை தீய பார்வையாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

'நீங்கள் என்னிடம் பைஅத் செய்திருந்தால், யாரையும் தவறான பார்வையால் பார்க்காதீர்கள். தகாத பார்வை கொள்ளாதீர்கள். திருக்குர்ஆன் கிறிஸ்தவ போதனையைப் போல 'கெட்ட பார்வையோடு பெண்ணைப் பார்க்காதே' என்று மட்டும் கூறவில்லை; மாறாக, பாலியல் இச்சையுடனும் பார்க்க வேண்டாம்; மேலும், பாலியல் இச்சையின்றி சாதாரண பார்வையுடனும் அந்நியப் பெண்ணின் முகத்தை உற்றுப் பார்க்க வேண்டாம் என்று திருக்குர்ஆன் கூறுகிறது. மேலும் எண்ணங்களைத் தவறான திசைக்கு இட்டுச் செல்லும் அவர்களின் எந்த மென்மையான பேச்சுகளையும் செவிமடுக்காதீர்கள். அப்போதுதான் நீங்கள் தடுமாற்றத்திலிருந்து தப்பிக்க முடியும் என்று திருக்குர்ஆன் போதிக்கின்றது.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: 'இன்றைய சமூகத்தில் நிலவும் இதே தீமைகளின் காரணத்தினால்தான் ஏராளமான மக்கள் தீமைகளில் மூழ்கியுள்ளனர்; குடும்பங்களும் பிரிகின்றன. இன்று முன்னேற்றமடைந்த நாடுகளில் கல்வியறிவு படைத்த பெண்களுக்கு மத்தியிலும் இந்த விழிப்புணர்வு ஏற்பட்டு விட்டது. 'எங்கள் மானத்தைக் காக்க ஏதாவது சட்டம் இயற்றப்பட வேண்டும்' என்று அவர்கள் குரல் எழுப்பி வருகிறார்கள்.

எனவே, இந்தத் தீமைகளுக்கு எதிராகப் போராடுவது அஹ்மதிகளின் கடமையாகும்.'

பரிசுத்தமானவராக திகழ்வதற்கு ஐந்து விஷயங்கள் உள்ளன என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

(1) (மஹ்ரம் அல்லாத) அந்நியப் பெண்களைப் பார்ப்பதிலிருந்து நீங்கள் தவிர்ந்திருங்கள்.

(2) உங்கள் காதுகளை அந்நியப் பெண்களின் குரலைக் கேட்பதிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

(3) அந்நியப் பெண்களின் கதைகளை கேட்காதீர்கள்.

(4) தீய செயல்கள் ஏற்பட வாய்ப்புள்ள அனைத்து விதமான நிகழ்ச்சிகள் மற்றும் சந்தர்ப்பங்களிலிருந்தும் உங்களை நீங்கள் விலக்கிக் கொள்ளுங்கள்.

(5) ஐந்தாவது விஷயம் இளைஞர்களுக்கானது என்னவென்றால், திருமணம் செய்வதில் ஏதேனும் சிரமம் இருந்தால், நோன்பு நோற்கட்டும்.

அடுத்து, மற்றொரு தீமை குழப்பம் விளைவித்தல், கட்டுப்படாமை மற்றும் ஒழுக்கக்கேடாகும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்:

ஒழுக்கக்கேடும், பாவச் செயல்களும் நிகழும் சபைகளை நீங்கள் கண்டால், அங்கிருந்து எழுந்து சென்றுவிடுங்கள்.

அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்வதிலிருந்தும் அன்னார் (அலை) தடை செய்துள்ளார்கள்.

அநீதி இழைப்பதிலிருந்து விலகி இருக்குமாறும் அன்னார் (அலை) அறிவுறுத்தியுள்ளார்கள்.

அடுத்து, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கடமையான ஜவேளைத் தொழுகைகள் மட்டுமின்றி தஹஜ்ஜுத் மற்றும் நஃபில் தொழுகைகளின் பக்கமும் கவனமூட்டியுள்ளார்கள்.

ஹதீஸில் வருகின்றது: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'என் அடியான் நஃபிலான இறை வணக்கங்கள் மூலம் என்னை நெருங்குகிறான்; இறுதியில் நான் அவனை நேசிக்கத் தொடங்கிவிடுகிறேன்.'

அவ்வாறே தஸ்பீஹ் மற்றும் தஹ்மீத் (இறைவனைப் போற்றிப் புகழ்தல்) செய்வதையும் ஹுஸூர் (அலை) அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

ஹதீஸில் வருகின்றது: அல்லாஹ்வின் புகழை எடுத்துரைக்காமல் தொடங்கப்படும் எந்தவொரு முக்கியமான காரியமும் பரக்கத் அற்றதாகிவிடும்.

இதேபோன்று நன்றி செலுத்துவதன் பக்கமும் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

ஸலவாத் ஓதுவதை உங்கள் வாழ்வின் ஓர் அங்கமாக ஆக்கிக் கொள்ளுங்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'யார் என் மீது ஒருமுறை ஸலவாத் ஓதுகிறாரோ, அவர் மீது அல்லாஹ் பத்து முறை அருள்புரிகிறான்.

அவ்வாறே தவ்பா மற்றும் இஸ்திஃக்ஃபார் செய்வதன் பக்கமும் அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'யார் இஸ்திஃக்ஃபாரை கடமையாக்கிக் கொள்கிறாரோ, அவருக்கு அல்லாஹ் ஒவ்வொரு நெருக்கடியிலிருந்தும் வெளிவரும் வழியை ஏற்படுத்தி தருகிறான்; அனைத்துக் கவலைகளிலிருந்தும் விடிவைத் தருகிறான்; மேலும் அவர் எதிர்பாராத இடத்திலிருந்து அவருக்கு வாழ்வாதாரத்தையும் வழங்குகிறான்.'

இறைவனின் படைப்பினங்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்வதும் அவசியமாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

பாருங்கள்! ஒருவர் மற்றொருவரைச் சுரண்டும் அந்த ஜமாஅத் ஜமாஅத்தாக இருக்க முடியாது. நால்வர் ஒன்று கூடி அமரும்போது தம் ஏழை சகோதரனைப் பற்றிப் புறம்பேசி குறைகூறும் கூட்டத்தினரும், பலவீனர்களையும், ஏழைகளையும் இழிவாகவும், வெறுப்புடனும் பார்க்கும் கூட்டத்தினரும் ஒரு ஜமாஅத் ஆக இருக்க முடியாது.'

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

'நான் எடுத்துரைத்த இந்த விஷயங்கள் சில குறிப்புகளே ஆகும்.

நாம் நமக்குள்ளே தூய்மையான மாற்றத்தை ஏற்படுத்தியவாறு, பைஅத்தின் கடமையை நிறைவேற்றியவாறு, இந்த பைஅத்தின் நிபந்தனைகளை முழுமையாக அமல் செய்தால், பின்னர் நாம் நம்மிடையே ஒரு தூய சமூகத்தை உருவாக்குபவர்களாக மட்டுமே திகழ மாட்டோம்; மாறாக, இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை உலகில் பரப்புபவர்களாகவும் திகழ்வோம்.' மேலும், முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்கள் மட்டுமன்றி, இறைமறுப்பாளர்கள் மற்றும் இஸ்லாத்திற்கு எதிரானவர்களிடையேயும் இத்தகைய போதனைகளைப் பரப்புபவர்களாக நாம் திகழ்வோம். அது எப்படியிருப்பினும் ஒரு நாள், 'உலகில் இறைவனின் ஆட்சியை நிலைநாட்டுவதுடன் உயரிய நல்லொழுக்க நெறிமுகளையும் வளர்த்தெடுக்க விரும்பும் மக்கள் அஹ்மதிகளே ஆவர்' என்று அவர்களைச் சிந்திக்க வைக்கும்.

இன்றைய காலகட்டத்தில் உலகிலிருந்து இறைவனின் பெயரை அழித்துவிடவும், உலகில் குழப்பத்தை விளைவிப்பதற்கும் தஜ்ஜாலிய சக்திகள் தமது முழு முயற்சியை செய்து வருகின்றன. இத்தகைய சூழலில், பைஅத்திற்கான உரிமையை நிறைவேற்றியவாறு, ஜிஹாது செய்தவாறு, இறைவனிடம் அவனது அருளை வேண்டடியவாறு, அவர்களின் தஜ்ஜாலிய சூழ்ச்சிகளை முறியடித்தவாறு முழு முயற்சி செய்வது நமது மாபெரும் பொறுப்பாகும்.

அல்லாஹ் நமக்கு இதற்கான நற்பேறை வழங்குவானாக!

(தற்போது) துஆ செய்யும்போது முழு உலகத்தின் அமைதி மற்றும் பாதுகாப்பிற்காகவும், முஸ்லிம்களின் நல்வாழ்வுக்காகவும் துஆ செய்யுங்கள்.

உலகில் ஏக இறைவனின் ஆட்சியை நிலைநாட்டுவதிலும், அமைதியையும், பாதுகாப்பையும் பரப்புவதிலும் ஒவ்வொரு அஹ்மதியும் தனது பங்களிப்பைச் செய்யக்கூடியவராக திகழ அல்லாஹ் அருள்புரிவானாக!

இதன் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) துஆ செய்தார்கள்.

நிறைவாக, ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

தற்போதைய வருகைப் பதிவின்படி அல்லாஹ்வின் அருளால் 51,181 நபர்கள் வருகை தந்து ஜல்ஸாவில் கலந்துகொண்டிருக்கின்றனர் என்றும், இந்த ஜல்ஸாவில் 117 நாடுகள் பங்கேற்றுள்ளன.

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * * * *

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** *Qadian*

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 05 NOVEMBER 2026 Issue No. 45

ACT. MANAGER
ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

ஸய்யிதுனா அமீருல் மு'மினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீ'பத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) **அவர்களுடனான**

ஆன்லைன் சந்திப்பு

பூர்கினா ஃபாஸோ நாட்டின் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தேசிய செயற்குழு உறுப்பினர்கள் ஹஸ்ரத் அமீருல் மு'மினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ'பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் நிகழ்த்திய Online சந்திப்பும் ஹுஸூர் அன்வர் அவர்களின் பொன்னான அறிவுரைகளும்

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ'பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 2022-ம் ஆண்டு பிப்ரவரி 26 அன்று புர்கினா பாஸோவின் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தேசிய மஜ்லிஸே ஆமிலா மற்றும் மண்டல காயித்மார்களுடன் இணையவழியில் ஒரு சந்திப்பை நிகழ்த்தினார்கள்.

இந்த ஆன்லைன் சந்திப்பில் இஸ்லாமாபாத் (தில்'போர்டு)-ல் உள்ள எம்.டி.ஏ (MTA) ஸ்டுடியோவிலிருந்து ஹுஸூர் அன்வர் அவர்கள் நேரலையில் இணைந்தார்கள்; அதேசமயம் 30-க்கும் மேற்பட்ட மஜ்லிஸே ஆமிலா உறுப்பினர்கள் புர்கினா பாஸோவின் வாகாதுகுவில் அமைந்துள்ள ஜாமிஅத்துல்-முபஷ்ஷிரீன் வளாகத்திலிருந்து ஆன்லைன் சந்திப்பில் பங்கேற்றனர். 65 நிமிடங்கள் நீடித்த இந்த சந்திப்பில் அனைத்துப் பங்கேற்பாளர்களும் (ஆமிலா உறுப்பினர்கள்) ஹுஸூர் அன்வர் அவர்களின் சமூகத்தில் தங்களது துறைகளின் அறிக்கைகளைச் சமர்ப்பித்து, வழிகாட்டுதல்களையும், ஆலோசனைகளையும் பெறுவதற்கு வாய்ப்பு பெற்றனர்.

முஹ்தமிம் ஸாஹிப் தர்பியத் மற்றும் போபோ ஜலாஸ்ஸே ஜமாஅத்தின் முரப்பி மதிப்பிற்குரிய ஹஸன் ஜன்கானீ ஸாஹிப் ஜாமிஆ அஹ்மதிய்யா கானா இன்டர்நேஷனலில் பட்டம் பெற்றவர் ஆவார். அவர் உருது மொழியில் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளத் தொடங்கியதும், ஹுஸூர் அன்வர் அவர்கள், 'சரி, நீங்கள் உருதுவில் தட்டச்சு செய்து கடிதம் எழுதி வருகின்றீர்களா?' என்று கேட்டார்கள். அதற்கு, 'ஆம்! ஹுஸூர்!' என்று அவர் பதிலளித்தார்.

ஹுஸூர் அவர்கள் மு'தமிம் தர்பியத் அவர்களுக்கு வழிகாட்டல் வழங்கியவாறு கூறினார்கள்:

'தர்பிய்யத் வழங்குவதற்கு என்ன திட்டம் உள்ளது? எவ்வாறு தர்பிய்யத் அளிப்பீர்கள்? தொழுகையின் பக்கம் கவனம் இருக்கிறதா? திருக்குர்ஆன் ஓதுவதன் பக்கம் கவனம் இருக்கிறதா? மார்க்கக் கல்வி கற்பதன் பக்கம் கவனம் உள்ளதா? நற்குணங்களை வளர்ப்பதன் பக்கம் கவனம் உளள்ளதா? உள்ளது என்றால், என்ன நிலையில் உள்ளது? தொழுகை நிறைவேற்றுவது தொடர்பாக என்ன திட்டம் உள்ளது? எத்தனை சதவீத குத்தாம் ஜமாஅத்துடன் தொழுகை நிறைவேற்றுகிறார்கள்? நீங்கள் இருக்கும் இடத்தில் தடைகள் (restrictions) ஏதும் இல்லாதபட்சத்தில் அங்கு ஜமாஅத்தாக தொழுகை நிறைவேற்றப்பட வேண்டும்'.

அதற்கு, 'ஆம்! ஹுஸூர்! நாங்கள் இந்த அனைத்து விஷயங்களையும் மிகவும் சிறப்பாகச் செயல்படுத்த முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம்' என்று அவர் கூறினார்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

' அசல் விஷயம் இதுவே ஆகும். அதாவது தொழுகையாகும். தொழுகையின் பக்கம் கவனம் இருக்க வேண்டும். காதிம்களுக்குத் தொழுகை நிறைவேற்றும் பழக்கம் வந்துவிட்டால், இன்ஷா அல்லாஹ் மற்ற விஷயங்களின் பக்கமும் கவனம் உருவாகி விடும். எனவே இவ்வாறு தர்பிய்யத் அளியுங்கள். இரண்டாவதாக, திருக்குர்ஆன் ஓதுவதன் பக்கம் அவர்களுக்கு கூடுதல் கவனம் இருக்க வேண்டும்.

அடுத்து, தர்பிய்யத் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய எழுத்துக்களின் ஏதேனும் ஒரு பக்கத்தையோ அல்லது அரைப் பக்கத்தையோ, அல்லது ஏதேனும் ஒரு ஆதாரத்தையோ எடுத்து அல்லது ஏதேனும் நபிமொழியையோ எடுத்து காதிம்களுக்கு அனுப்பி வையுங்கள். அவர்கள் அதை வாசித்துத் தங்களை சீர்திருத்திக் கொண்டு தர்பிய்யத் பெற வேண்டும். பிறகு, அனைத்து காதிம்களும் எம்.டி.ஏ வில் வருகின்ற எனது ஜும்ஆ உரையை ஒவ்வொரு முறையும் (நேரலையில்) கேட்க வையுங்கள். இது கட்டாயம் கேட்கப்பட வேண்டும்.'

ஹுஸூர் அன்வர் அவர்கள் மு'தமிம் ஸாஹிப் தப்லீ'க் அவர்களுக்கு இவ்வாறு அறிவுறுத்தினார்கள்:

தேசிய, பிராந்திய மற்றும் உள்ளூர் மட்டங்களில் சேவையாற்றுகின்ற அந்த அனைத்து மஜ்லிஸே ஆமிலா உறுப்பினர்களும் முழுமையான வகையில் தப்லீ'க் பணிகளில் ஈடுபட வேண்டும். மேலும், அவர்களை motivate செய்யும் பொருட்டு அவர்களுக்கு குறிப்பிட்ட இலக்குகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் மு'தமிம் ஸாஹிப் இஷாஅத் அவர்களுக்கு அறிவுரை வழங்கியவாறு கூறினார்கள்: '

காதிம்கள் தங்களது பத்திரிகைகளுக்காக ஏதேனும் எழுதும்படி அவர்கள் காதிம்களுக்கு வலியுறுத்த வேண்டும்'

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: 'படித்தவர்கள் மற்றும் நகரங்களில் வசிப்பவர்களும் சிறிது கட்டுரைகள் எழுத வேண்டும். இது தொடர்பாக அவர்களுக்கு கவனமூட்ட வேண்டும். அவர்களில் சிலர் தாங்கள் எவ்வாறு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள்? அல்லது அவர்களின் பெற்றோர் எவ்வாறு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டனர்? என்பதை எழுதலாம். நாம் ஏன் அஹ்மதியத்தை ஏற்க வேண்டும்? திருத்தூதர் (ஸல்) அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் குறித்து என்ன முன்னறிவிப்புகள் செய்துள்ளார்கள்? போன்ற கட்டுரைகள் மக்களின் அறிவையும், நம்பிக்கையையும் வளர்க்கும். பிறகு நீங்கள் அவர்களை அஹ்மதிய்யா ஜமாஅத் சார்ந்த ஏனைய தலைப்புகளில் மேலும் எழுதும்படி ஊக்குவிக்கலாம்; அவர்களின் கட்டுரைகளைப் பார்த்து பிற காதிம்களும் எழுதுவதற்கு முன்வருவார்கள்; அல்லது குறைந்தபட்சம் தங்களது ஈமானை வளர்த்துக் கொள்ள முயல்வார்கள்.'

மு'தமிம் தர்பிய்யத் நவ்முபாயீன் (புதிதாக பைஅத் செய்தவர்களுக்கான தர்பிய்யத் செயலர்) மதிப்பிற்குரிய பாவ்ரோ அஹ்மத் ரஷீத் சாஹிபிடம் ஹுஸூர் அவர்கள் வினவினார்கள்: 'நீங்கள் பிறப்பிலேயே அஹ்மதியா? அல்லது நீங்களாகவே பைஅத் செய்தீர்களா?' என்று கேட்டார்கள். அதற்கு, 'நான் பிறப்பால் அஹ்மதியல்ல; நானே பைஅத் செய்தேன்' என்று அவர் கூறினார்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

'வெவ்வேறு பிரிவிலிருந்து, வெவ்வேறு மதங்களிலிருந்து பைஅத் செய்து வருபவர்களுக்குத் தனித்தனித் திட்டங்கள் இருக்க வேண்டும். முஸ்லிம்களாக இருந்து, ஜமாஅத்தில் இணைந்த காதிம்களும் இருக்கலாம்; அவர்கள் தொழுகை, சூரத்துல் ஃபாத்திஹா மற்றும் திருக்குர்ஆன் ஓத அறிந்திருக்கக் கூடும். அவர்களுக்கு அஹ்மதிய்யத் பற்றி அதிகம் கூறப்பட வேண்டும். அவர்களின் இஸ்லாமிய அறிவை வளர்க்க முயற்சி செய்ய வேண்டும். மேலும், கிறிஸ்தவத்திலிருந்து இணைகின்றவர்களுக்கு பல்வேறுபட்ட தர்பிய்யத் நிகழ்ச்சிகள் இருக்க வேண்டும்.தொழுகையில் ஓதவேண்டிய வார்த்தைகளை அவர்கள் கற்க வேண்டும்; சூரத்துல் ஃபாத்திஹாவைக் கற்க வேண்டும்; அவர்களுக்குத் தொழுகை முறையைக் கற்றுக் கொடுக்க வேண்டும்; தொழுகையின் பொருளைக் கற்பிக்க வேண்டும்; மேலும் இந்த ஐவேளைத் தொழுகையை ஏன் நிறைவேற்ற வேண்டும்? என்பதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இதேபோன்று ஏனைய பிரிவினர் இருக்கின்றனர். ஒவ்வொரு பிரிவினருக்கும் வெவ்வேறுத் திட்டங்கள் இருக்க வேண்டும்; அனைவருக்கும் ஒரே திட்டமாக இருக்கக் கூடாது. (நன்றி: அல்-ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை, 25 மார்ச் 2022)

தமிழாக்கம்

முரப்பி A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * * * *

National Watch Company
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
O.A.N. Doors & Steels
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad